ௐ

# இல்லறத்தின் நுழைவாயில்

## இருமனம் இணையும்
## திருமணபந்தம்



வல்வெட்டித்துறை

திருநிறை செல்வன் சாரூபன்
திருநிறை செல்வி விசாந்தினி

புதுமணத் தம்பதிகளின் மணமங்கல அன்பளிப்பு

30-10-2017

[illegible]

N.SIVARATNAM
B.A (S.L), A.I.B, F.I.B (S.L), P.G.Dip-in-Pub
(Rtd. Asst. Gen. Manager, BOC Northern Prov
Murugaiyan Kovilady,
Valvveddithurai.
valvaijeyam@gmail.com
+94 76 646 3289

27/7/20

உ

# இல்லறத்தின் நுழைவாயில்

இருமனம் இணையும் திருமண பந்தம்
சைவத் திருமண நடைமுறைகளும்
மந்திரங்களின் விளக்கங்களும்

புதுமணமக்கள்
வல்வெட்டித்துறை,
திருநிறை செல்வன் சாரூபன்
திருநிறை செல்வி விசாந்தினி
தம்பதிகளின்
மணமங்கல அன்பளிப்பு
30.10. 2017

**மணமக்கள்:**

வல்வெட்டித்துறை
திரு, திருமதி சிவரட்ணம் – நளினி தம்பதிகளின்
ஏகபுதல்வன்
திருநிறை செல்வன் சாரூபன்
திரு, திருமதி விசாகரத்தினம் – இராசமலர்
தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி விசாந்தினி.


**வெளியீடு:**

**திரு நடராஜா சிவரத்தினம்**
B.A.(S.L.), A.I.B., F.I.B.(S.L.), P.G. Dip-in Pub.Admin.
Retried Asst. General Manager, BOC
முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
T.P. No.: 0766463289, 021 226 3750
valvaijeyam@gmail.com

தொகுப்பும் கணினி வடிவமைப்பும்:
**பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா** B.A. (Hons)
**(கோப்பாய் சிவம்)**

அச்சுப்பதிவு:
**கஜானந்த் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்**
**இணுவில்.**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| திருமணக் கிரியைகளும் சடங்குகளும் | 01 |
| மணவறை ஒழுங்குகள் ~ படம் | 20 |
| தேவையான பொருட்கள் | 21 |
| சில பொருட்களின் சிறப்பு | 22 |
| முக்கியம் கவனிக்கப்படவேண்டியவை | 26 |
| தவிர்க்கப்படவேண்டியவை | 33 |
| பதினாறு பேறுகள் | 35 |
| கல்யாணம் (வை) போவமே ~ கவிதை | 36 |

# உசாத்துணை நூல்கள்


1. சைவத்திருமணம்
   வேதாகம பூஷணம் பிரம்மஸ்ரீ
   கு. பாலசுந்தரக் குருக்கள் - 1961

2. விவாஹ சோபனம்
   ஸ்ரீ, ஸ்ரீமதி சிவானந்தசர்மா - 1998

3. விவாஹ மந்த்ரார்த்த போதினி
   கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர் - 1974

4. மரபு தழுவிய திருமண நாண் பூணல்
   சிவதொண்டன்
   செல்லப்பா தியாகராஜா கனகலிங்கம் - 2005

5. விவாஹ மங்கள கிரியாபத்ததி
   கோப்பாய் சிவம்
   சர்வானந்தமயபீடம் 2011

6. கல்யாண வசந்தம்
   நீர்வை தி. மயூரகிரிசர்மா
   பொன் செல்வமஹால் நீர்வேலி
   திருமண மண்டபத் திறப்புவிழா மலர் 2013

# திருமணக் கிரியைகளும் சடங்குகளும் – சில விளக்கங்கள்.

இல்லற தர்மத்தின் அவசியம், அதன் சிறப்பு என்பவற்றையும் அதன் வாயிலாக அமைந்திருக்கும் திருமணச் சடங்கின் முக்கியத்துவத்தையும் முதல் அத்தியாயத்தில் பார்த்தோம். அந்தத் திருமணச் சடங்கானது எவ்வகையில் நிகழ்கிறது? அங்கு நடைபெறும் கிரியைகளின் நோக்கங்கள் என்ன? அவற்றின் தத்துவார்த்தங்கள் என்ன என்பதை இந்தப் பகுதியில் பார்ப்போம்.

சைவத் திருமண நடைமுறைகளை நாம் பின்வரும் முக்கிய நிகழ்ச்சிகளாக வகைப்படுத்தியும் வரிசைப்படுத்தியும் நோக்கலாம்.

அ. திருமண நாளிற்குமுன் பூர்வாங்கமாக நடப்பன.
ஆ. திருமண நாளில் மணவறைக்கு வருமுன் நடப்பன.
இ. மணவறையில் நடப்பன.

## அ. திருமண நாளிற்குமுன் பூர்வாங்கமாக நடப்பன.

### 1. நிச்சயதார்த்தம்.

ஒரு ஆணையும் பெண்ணையும் இவர்கள்தான் திருமண பந்தத்தில் இணையப் போகிறவர்கள் என்பதை முதலில் உலகறியச் செய்யும் நிகழ்வாகவும் இருதரப்புப் பெற்றோர் தமக்குள் ஒரு வாக்கு நிச்சயமாகவும் இந்த ஆரம்ப நிகழ்வுகளைக் கொள்வர்.

வரப் பிரேஷணம், வாக்தானம், வாங்நிச்சிதம் என வேதபாஷையில் சொல்லப்படும் ஆரம்ப நிகழ்வுகள் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க இன்று சில மாற்றங்களுடன் நடைபெறுகின்றன.

உறவினர், நண்பர்களின் அறிமுகம் மூலமாகவோ அன்றி திருமணப் பொருத்துனரின் துணையாலோ அல்லது மணமக்கள் தாமாக ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்து விரும்புதல் மூலமாகவோ இதற்கு ஆரம்பம் எனப்படும் பிள்ளையார் சுளி இடப்படுகிறது.

அதன்பின் இருதரப்பினரும் கலந்து பேசி ஜோதிட அடிப்படையில் திருமணப் பொருத்தம் பார்த்தல், மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தல், சீதனம் முதலிய உலகியல் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவுக்கு வருதல், நொத்தீசு போடுதல் (Notice) மூலம் அயலவர்கள் யாருக்காவது ஆட்சேபனை இருக்குமாயின் தெரிவிக்கச் சந்தர்ப்பமளித்தல் என்ற வரிசைகள் ஒப்பேறியபின் திருமணத்தை நிச்சயப்படுத்துதல் என்ற சடங்கு நடைபெறும். இது இன்று அந்தணர் இல்லங்களில் வழிபாட்டுடன் கூடிய ஒரு மங்கல நிகழ்வாக நடத்தப்படுகிறது. (நிச்சயதார்த்தம் - நிச்சயதாம்பூலம்) ஏனையோர் இல்லங்களில் சட்ட ரீதியான திருமணப் பதிவுடன் நிறைவுபெறுகிறது.

இருபகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வந்து திருமணம் நிச்சயிக்கப்பட்டதும் சம்பந்தக்கலப்பு அல்லது நிச்சயதார்த்தம் நடைபெறும். முதலில் பெண் வீட்டார் வேள்வு என்று பலவித பலகாரங்களைச் செய்து மணமகன் வீட்டுக்கு கொண்டுசென்று கொடுப்பார்கள். அதே போல் மணமகன் வீட்டினரும் பலவித பலகாரங்கள் செய்து பெண்வீடு கொண்டுசென்று கொடுத்து மகிழ்ச்சி கொள்வர். இவ்வாறு செய்வது ஒரு முறைமை.

இதன்பின் திருமண நாள் குறித்தல் நடைபெறும். மணமக்கள் இருவரது நட்சத்திரங்களுக்கும் பொருத்தமுடையதாகவும் (படுபட்சி முதலியன இல்லாத) கரிநாள், மரணயோகம் முதலிய தோஷங்கள் எதுவுமில்லாத நல்லநாளாகவும் அமையும் தினத்தில் ஒரு நல்ல சுப நேரத்தைச் சோதிடர் மூலம் ஆராய்ந்து தெரிவு செய்வர்.

இந்த நாளைக்குறிப்பிட்டு உறவினர்கள், நண்பர்களை

அழைப்பதற்காக திருமண அழைப்பு ஒன்றை மங்கலமான பாரம்பரிய வார்த்தைகளைப் பயன்படுத்தி அழகிய முறையில் வண்ணமுற அச்சிட்டு அதனை விநியோகிக்கத் தயாராக வைத்திருப்பர். நல்ல ஒரு நாளில் மதிப்புக்குரிய ஒரு முதிய தம்பதியினருக்கு வழங்குவதில் ஆரம்பிப்பார்கள். இது பெரும்பாலும் பொன்னுருக்கு நாளாக அமையும்.

## 2. பொன்னுருக்கு

திருமணத்திற்காகக் குறித்த நன்னாளிற்குச் சுமார் ஒரு வாரம் முன்னதாக பொன்னுருக்கு, கன்னிக்கால் நடுதல், பந்தற்கால் நடுதல் என்ற சடங்குகளுக்காக ஒரு நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பர்.

அந்த நன்னாளில் மண மகன் வீட்டில் இரு குடும்பத்தினரும் கூடி பாரம்பரியத் தொழில் நுணுக்கங்கள் தெரிந்த நல்ல குல ஆசாரம் உடைய ஒரு பொற்கொல்லரைக்கொண்டு தாலிக்குரிய ஒரு முழுப் பொன்னை உருக்கச்செய்வர். அதனை அவர் தமது தொழிலகத்திற்கு எடுத்துச்சென்று அவரவர் குல வழக்கத்திற்கேற்ற முறையில் தாலியாக வடிவமைத்துக் கொடுப்பார்.

பொன்னுருக்கு நிறைவுற்றதும் நன்கு செழித்து வளரக் கூடிய முள்முருக்கம் தடி ஒன்றினை மாவிலை பட்டு முதலியவற்றால் அலங்கரித்து வீட்டு முற்றத்தில் பந்தற்காலாக நாட்டி அதனைச் சுற்றி நவதானியத்தைப் பெண்கள் முளைக்கப் போடுவர்.



பொன் உருக்குதல்

இதே நாளில் மணப்பெண் வீட்டிலும் இவ்வாறு கன்னிக்கால் நாட்டுவர்.

அதன்பின் நாளுக்கு திருமண அழைப்புக்குப் புறப்படுவர்.

## ஆ. திருமண நாளில் மணவறைக்கு வருமுன் நடப்பன.

### 1. பால் அறுகு வைத்தல்

மணமகள் இல்லத்தில் விநாயக வழிபாடு, பஞ்சகவ்ய பூஜை, புண்யாக வாசனம் என்பன செய்து மணப்பெண்ணிற்கு பால் அறுகு வைத்துத் தோயவார்த்து அலங்காரங்கள் செய்வித்தல். தலைக்குத் தண்ணீர் வார்த்தல் முதலியவற்றில் பெண்ணின் தாய்மாமனுக்கும் அவரது மனைவிக்கும் முதலிட முண்டு.

(முன்னர் அப்பெண் ருதுவான வேளையில் சாமர்த்தியச் சடங்கு முறைப்படி நடத்தப்படாதிருந்தால் பெண்கள் கூடி ஏற்றி இறக்குதல் எனும் திருஷ்டி நீக்கும் சம்பிரதாயச் சடங்கினையும் செய்விப்பர்.)

### 2. கடுக்கன் பூட்டுதல்

மணமகன் இல்லத்தில் விநாயக வழிபாடு, பஞ்சகவ்ய பூஜை, புண்யாக வாசனம் என்பன செய்து மணமகனுக்குக் கடுக்கன் பூட்டுதல், தலைப்பாகை வைத்தல் முதலியவற்றை நடத்திவைத்தல்.

### 3. மாப்பிள்ளை அழைப்பு

மணமகள் இல்லத்திலிருந்து மங்கலப் பொருட்கள் சகிதம் ஒரு தம்பதியினரும் வேறு சிலருமாக மாப்பிள்ளை வீட்டிற்கு வந்து இந்நிகழ்வில் கலந்துகொண்டபின் மணவறைக்கு அழைத்து வருவர். மணப்பெண்ணின் சகோதரர் மாப்பிள்ளைத் தோழனாகவும் மணமகனின் சகோதரி தோழியாகவும் மணச் சடங்குகளில் பங்கேற்பர்.

மாப்பிள்ளை அழைப்பின்போது தோழனின் பங்கு முக்கியமானதாகும். மணப்பந்தலின் வாசலில் மாப்பிள்ளை வந்ததும் அவரது பாதங்களைக்கழுவி வரவேற்பதும் அவரது கடமையாகும். இதற்கு நன்றிப் பரிசாக அவருக்கு மணமகன் மோதிரம் ஒன்றைப் பரிசளிப்பது வழக்கம்.

## இ. மணவறையில் நடப்பன.

### மணவறை ஒழுங்குகள்

மணப்பந்தலில் கிழக்கு நோக்கியவாறு மணவறை அமைக்கப்படும். மணமக்கள் கிழக்கு நோக்கி அமர்தலே முறை. சில இடங்களில் வசதிக் குறைவு காரணமாக வடக்கு நோக்கி அமர்தலும் உண்டு.

மணமக்கள் அமரும் இடத்திற்கு முன்பாக புண்யாகவாசன கும்பமும் பஞ்சகவ்யம், மஞ்சள் பிள்ளையார் முதலியனவும் மணி, தீபக்கால் முதலிய பூஜைப் பொருட்களும் இருக்கும். அதற்குக் கிழக்கே அக்கினிமேடையும் அதனையடுத்து வடக்கே அம்மிக்கல்லும் அதற்கும் வடக்கே ஈசானத்தில் சிவசக்தி கும்பங்களும் வாயுதிக்கில் சந்திர கும்பமும் அதனருகே பாலிகைச் சட்டியும் அக்கினி திக்கிலே நவக்கிரக கும்பங்களும் அமைந்திருக்கும். அக்கினி மேடைக்கு கிழக்கே அரசாணிக் காலும், அதனைச் சுற்றி நான்கு நிறைகுடம் குத்துவிளக்கு முதலியனவும் இருக்கும். அதற்கருகே மஞ்சள்கரைத்த நீர் உள்ள பாத்திரம் இருக்கும்.

### மணவறைச் சடங்குகள்

#### 1. விநாயகர் பூஜை முதலியன.

மணவறையில் சுபநேரத்தில் மணமகன் வந்து அமர்ந்ததும் அங்கு விநாயக வழிபாடு, பஞ்சகவ்ய பூஜை, புண்யாக வாசனம் என்பன செய்து மணமகனுக்கு சங்கல்பம் செய்யப்படும். சங்கல்பத்திற்குமுன் பஞ்சகவ்யம் அருந்துதல் இடம்பெறும்.

## 2. சந்திரகும்ப பூஜையும் அங்குரார்ப்பணமும்.

அதனைத் தொடர்ந்து சந்திர கும்ப பூஜை செய்து முளைப் பாலிகை இடுதல் (அங்குரார்ப்பணம்) நடைபெறும். இருதரப்பினரையும் சேர்ந்த சுமங்கலிப்பெண்கள் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது என்ற கணக்கில் அழைக்கப்பட்டு அவர்கள்மூலம் பாலில் நனைக்கப்பட்ட நவதானியத்தைக் கொடுத்து அதனைப் பாலிகைச் சட்டியில் கிழக்கிலிருந்து வலமாக நான்கு திக்குகளிலும் போடச்செய்வர்.



அங்குரார்ப்பணத்திற்கெனச் சொல்லப்பட்ட தானியங்கள் நெல், உழுந்து, எள், பச்சைப்பயறு, கடுகு என்பனவாம். பொதுவாக நவக்கிரக தானியங்களான கோதுமை, நெல், துவரை, பயறு, கடலை, மொச்சை, எள், உழுந்து, கொள்ளு ஆகியவற்றைப் பயன்படுத்துவதுமுண்டு.

இவ்வாறு ஒவ்வொருவரும் போட்டதும் அவர்களது கையில் வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள் தேறு, நவதானியம் என்பவற்றைக் குரு கொடுத்துக் கௌரவித்து வலமாக அனுப்புவார்.

## 3. மணமகனுக்கு ரட்சாபந்தனம்

இதன்பின் ரட்சாபந்தன பூஜை நடைபெற்று மாப்பிள்ளைக்குக் காப்புக்கட்டுதல் நடைபெறும். ரட்சாபந்தனத் தட்டு பச்சரிசியால் நிரப்பப்பட்டு அதன்மீது தேங்காய், மாவிலை, வெற்றிலை, பாக்கு, பழம், விபூதி, மஞ்சள்மா, பூக்கள் என்பவற்றோடு மஞ்சள் பூசிய பருத்தி நூல் (காப்பு) வைக்கப்பட்டிருக்கும்.

## 4. கும்ப பூஜைகள்

மணவறையில் வைக்கப்பட்டிருக்கும் சிவசக்தி

கும்பங்களுக்கும் நவக்கிரக கும்பங்களுக்கும் பூஜைகள் நிகழும். சைவர்களாகிய நாம் சிவ வழிபாட்டை முதன்மையாகக் கொண்டவர்கள் என்பதாலும், யாக பூஜைகள், அக்னிகாரியம் என்பவற்றுக்கு சிவசக்தியரே தலைவர் என்பதாலும் (யாகேஸ்வரன் - யாகேஸ்வரி) இங்கு அவர்களுக்கான பூஜை முதன்மை பெறுகிறது.

நவக்கிரக நாயகர்கள் இந்த உலக இயக்கத்திற்குக் காரணர்களாக இருப்பவர்கள் என்பதால் அவர்களுக்கும் இங்கு பூஜை நடைபெறுகிறது.

### 5. பெண் அழைத்துவரப்படல்

இப்போது மணவறைக்கு மணப்பெண் அழைத்து வரப்படுகிறாள். அங்கு வந்து சேர்ந்ததும் முதலில் மணமகனுக்குச் செய்ததுபோல பஞ்சகவ்வியம் அருந்தக் கொடுத்துச் சங்கற்பம் செய்து காப்புக்கட்டுதல் வரை நடைபெறுகிறது.

### 6. அக்கினி வளர்த்தல்

அதனையடுத்து அக்கினி வளர்க்கப்பட்டு அதில் சிவசக்தியரும் நவநாயகர்களும் ஆவாஹனம் செய்து ஆஹு"திகள் வழங்கி ஆராதிக்கப்படுகின்றனர். அக்கினி வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்தே நமது பாரம்பரியத் திலுண்டு. அதுமட்டுமல்லாமல் அக்னி சாட்சியாகவே இந்தத் திருமணம் நிறைவேறுகின்றது. இக் காரணங்களால் அக்கினி வழிபாடு இங்கு சிறப்பிடம் பெறுகிறது.

### 7. பெற்றோர் சங்கற்பம்.

இருதரப்புப் பெற்றோர்களையும் இருபுறம் இருக்கவைத்து அவர்களுக்கும் பஞ்சகவ்யம் அருந்தச்செய்து சங்கற்பம் செய்விக்கப்படுகிறது.

## 8. சம்பந்தி உபசாரம்

சம்பந்திகள் இருவரும் ஒருவருக்கொருவர் உபசாரம் செய்துகொள்ளுதல் நடைபெறும். முதலில் மணமகளின் தந்தை மணமகனின் தந்தைக்கு சந்தனம் கொடுத்து உபசரிக்க அவ்வாறே மணமகனின் தந்தை மனமகளின் தந்தையை உபசரிப்பார். இதே ஒழுங்கில் பெண்கள் இருவரும் ஒருவருக்கொருவர் குங்குமம் கொடுத்து உபசாரம் செய்வர். முடிவில் ஒருவருக்கொருவர் வெற்றிலை, பாக்குப் பழம் முதலியவற்றைப் பரிமாறிக் கொள்வதுமுண்டு.

## 9. நாந்தி சிராத்தம் (பிதிர் வழிபாடு)

நற்காரியங்கள் யாவற்றிலும் நமது முன்னோர்களான பிதிரர்களின் ஆசி மிகவும் முக்கியம். இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளாத பலர், மணநாள் குறித்தபின் திவசம் செய்வதற்குத் தயங்குகின்றனர். இது தவறாகும்.

சபிண்டீகரணம் - ஆட்டுத்திவசம் இவை நிறைவுபெற்றபின் நமது முன்னோர்கள் அல்லது இறந்த நமது குடும்பத்தவர்கள் தமது பிரேதத்துவம் முற்றாக நீங்கி பிதிர் லோகம் சென்றடைந்து அங்குள்ள பிதிர் தேவர்களாகிய சண்ட கண்ட கணாதீசர்களுடன் சேர்ந்துவிடுகின்றனர். அவர்கள் மங்களமாக உள்ளவர்கள். நமது நல்வாழ்விற்காக என்றும் பிரார்த்திப்பவர்களாகவும் ஆசி தரக்கூடிய வல்லமை உடையவர்களாகவும் இருக்கின்றனர். அதனால் அவர்களது வழிபாட்டை மங்கலமான முறையில் செய்யும் ஒரு முறையை மங்கள சிராத்தம் எனத் திருமண நாளில் ஏற்படுத்தியுள்ளனர்.

இருதரப்புப் பெற்றோரும் தமது முன்னோரைத் திருப்திப்படுத்தி அவர்களது ஆசிகளை வேண்டிக் கொள்வதற்காக தனித்தனியே இரு அந்தணர்களுக்கு அரிசி, காய்கறி, வஸ்திரம், தடசணை முதலியவற்றை வழங்குகிறார்கள்.

10. கன்னிகாதானம்.



ஒரு பெண்ணை அவளது பெற்றோர் முறைப்படி ஒரு வரனிடம் கையளிப்பதே கன்னிகாதானம். மணமகனின் கைகளில் மணமகனின் கைகளை வைத்து மணமகளின் தாயார் சிறிது நீர் அங்கு துளிக்கச்செய்யப் பெண்ணின் தந்தையார் ஒப்புவிப்பார். இதனைத் தந்தை தமது மகளை மடியில் வைத்திருக்க மணமகன் முன்னால் நின்று வாங்கிக் கொள்வதாகச் செய்வதுண்டு. இது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இதன்போதும் பின்னர் தாலிகட்டும்போதும் முன்னர் காப்புக் கட்டும்போதும் அந்த நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் காரணமாக விநாயகப் பெருமானை நினைந்து - தடைகள் இருக்கலாகாது என வேண்டித் தேங்காய் உடைப்பார்கள். மிக நெருங்கிய உறவினரும், மங்கல வாழ்வை உடையவரும் ஓரளவு வயதானவராகவும் உள்ள ஒருவர் தலையில் தலைப்பாகை அணிந்து வடக்குமுகமாக உட்கார்ந்திருந்து தேங்காய் உடைப்பார். இந்த நிகழ்ச்சி களின்போது வெளியிலிருந்து தும்முதல் முதலிய அமங்கல ஒலிகள் அங்கு கேளாமல் இருப்பதற்காகவும் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் மங்கலத் தன்மையை நினைவூட்டவும் கொட்டிமேளம் வாசிப்பார்கள்.

கோத்திர உச்சாரணம்

கன்னிகாதானம் செய்யும்போது இருதரப்பையும் சேர்ந்த மூன்று தலைமுறைப் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறுவது

மரபு. பாரம்பரியத்திற்கு நாம் கொடுக்கும் மதிப்பையும் நமது முன்னோர்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதையையும் இது காட்டுகிறது. இதனைக் கோத்திர உச்சாரணம் எனவும், குலமுறை கிளத்தல் எனவும் சொல்வர்.

இன்னாரது கொள்ளுப் பேரனும் இன்னாரது பேரனும் இன்னாரது மகனும் இன்ன பெயருள்ளவருமாகிய இந்த வரனுக்கு இன்னாரது கொள்ளுப் பேர்த்தியும் இன்னாரது பேர்த்தியும் இன்னாரது புத்திரியுமாகிய இன்ன பெயருள்ள இக் கன்னிகையை கையளிக்கிறேன் என்று சொல்லப்படுகிறது.

எனவே இருதரப்பிலும் மூன்று முன்னோர் பெயர்கள் வரிசைப்படுத்தி நான்காவதாக மணமகன், மணமகள் பெயர் வரக்கூடியதாக முதலிலேயே எழுதித் தயார் செய்து வைத்திருக்க வேண்டும்.

### பாதபூஜை

மணமகனை சிவபிரானாகக் கருதுவதே மரபு. அதனால் மணமகளின் தந்தை மாப்பிள்ளையின் கால்களைக் கழுவி சந்தனம் இட்டுப் பாத பூஜை செய்வது வழக்கம். இவ்வழக்கம் இப்போது பல இடங்களில் அருகி வருகிறது.

### மாங்கல்ய பூஜை

மாங்கல்யம் என்ப்படும் தாலியை புண்யாக நீரினால் சுத்திகரித்து அதில் மஹாலட்சுமியை ஆவாஹனம் செய்து அக்கினியிலும் அதற்காக ஓர் ஆகுதி கொடுத்து பூஜித்து அதன்பின் சிவ்சக்தி கும்பங்களில் அந்தத் திருமாங்கல்யத்தைச் சாத்தி ஆராதனை செய்வர்.

### தாலிகாட்டுதல்

பூஜை செய்யப்பட்ட தாலி மற்றும் மங்கலப் பொருட்கள் வைக்கப்பட்ட தட்டினை ஒருவர் எடுத்துச்சென்று அதனை

வந்திருக்கும் விருந்தினர்கள் அனைவரிடமும் காட்டி அவர்களது நல்லாசிகளைப் பெறுவார். ஆண்களிடம் ஒரு ஆண்மகன் ஆசிபெற்றதும் அவரது மனைவி பெண்களிடம் எடுத்துச்சென்று ஆசிபெறுவது வழக்கம். தாய்மாமன் அல்லது மிக நெருங்கிய உறவினராகவும் நிறைவான குடும்பஸ்தராகவும் இத்தம்பதிகள் இருப்பதை விரும்புவர்.

### மங்கலப் பொருட்கள் பரிமாறுதல்

மணமக்கள் ஒருவருக்கொருவர் மங்கலப் பொருட்களான புது உடுப்புக்கள் - கூறைப் புடைவை, பட்டு வேட்டி, மஞ்சள், குங்குமம், அலங்காரப் பொருட்கள் முதலியவற்றைப் பரிமாறிக் கொள்வர். மணப்பெண் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு கூறைப் புடைவை அணிவித்து அலங்காரம் செய்வித்து மறுபடி மணவறைக்கு அழைத்துவரப்படுகிறாள்.

### தானங்கள்

எந்த ஒரு நல்லகாரியத்தைச் செய்யத் தொடங்குமுன் தானங்கள் வழங்கித் தொடர்வது நமது மரபு. அவ்வகையில் தாலிகட்டுதல் என்னும் சுபகாரியத்தின் முன்பாக யாத்ராதானம், நவக்கிரக தானம் என்பவற்றைச் செய்யும் முகமாக சபையில் அமர்ந்திருக்கும் அந்தணர்களுக்கு தட்சணைகள் வேட்டி சால்வை முதலியன வழங்கி அவர்களை மகிழ்வித்து ஆசி பெறுதல் நடைபெறும்.

### மணங்கல நாண் பூணுதல்.

திருமணச்சடங்கின் மிக முக்கியமான அம்சமாக இன்று நம்மால் கருதப்படுகின்ற தாலிகட்டுதல் என்னும் நிகழ்ச்சி அடுத்ததாக இடம்பெறும். மாப்பிள்ளை எழுந்துநின்று உட்கார்ந்திருக்கும் மணமகளின் முன்நின்று மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டிருக்கும் தங்கத் தாலியை (பொன்னுருக்கின்போது உருக்கிய ஒருபவுண் மூலம் பொற்கொல்லர் குலமரபுப்படி

உருவாக்கித்தந்த தாலி) கழுத்தைச் சுற்றி பின்புறத்தில் மூன்று முடிச்சுக்களை இடுவார்.

இவ்வேளையில் மாப்பிள்ளையின் சகோதரிமார் இச்செயலில் தமது உதவிகளை வழங்குவர். லட்சுமிவிளக்கு ஒன்றினை ஏற்றி அதனை இந்த வேளையில் மணமக்களின் பின்புறத்தில் தாலி முடிச்சு இடப்படும்போது அருகே ஒரு சுமங்கலி பிடித்திருப்பாள்.

"நான் சிரஞ்ஜீவியாக இருப்பதற்குக் காரணமான இந்த மங்கல நாணை உன் கழுத்தில் கட்டுகிறேன். பாக்கியவதியே, நீயும் நூறாண்டு வாழ்வாயாக" என்ற கருத்தமைந்த

"மாங்கல்யம் தந்துநாநேன மம ஜீவன ஹேதுனா
கண்டே பத்னாமி சுபகே த்வம் ஜீவ சரதஸ் சதம்"

என்ற மந்திரம் கூறப்படுகிறது.

### மாலை மாற்றுதல்

மணமக்கள் தாம் அணிந்திருக்கும் பூமாலைகளை ஒருவருக்கொருவர் மூன்று முறை மாற்றி அணிந்துகொள்வர். இதன்போது தோழனும் தோழியும் உதவி நல்குவர்.

மாலைமாற்றுவது என்பது முக்கியமான ஒரு தத்துவத்தை விளக்குகிறது. பொதுவாக ஒருவர் அணிந்த மாலையை இன்னொருவர் அணிவது தவறு. ஆனால் மணமக்கள் மட்டுமே விதிவிலக்கு. ஏனெனில் அவர்கள் இப்போது இருவர் அல்ல, ஒருவர்தான் என்பதே அந்தத் தத்துவமாகும்.

### உபசாரங்கள் வழங்கலும் திலகமிடலும்.

பெண்ணுக்குரிய மஞ்சள், குங்குமம் முதலியவற்றையும் அலங்காரப் பொருட்களையும் மணமகன் இப்போது ஒவ்வொன் றாக நல்குவதுடன் நெற்றியில் சிந்தூரத் திலகத்தையும் இட்டுக் கண்ணாடியில் இருவரையும் சேர்ந்தபடி பார்த்து மகிழ்வர்.

பால்பழம் அருந்துதல்

சத்தும் சுவையுமுள்ள பூரண உணவான பால் பழத்தினை முதல்முதல் மணமக்கள் ஒருவருக்கொருவர் பரிமாறி உண்பதும் தாம்பூலத்தைப் பரிமாறி உண்பதும் ஒருவரை ஒருவர் புரிந்து ஒருவருக்கொருவர் உதவி அன்போடும் மகிழ்வோடும் வாழ்வதன் அடையாளமாகக் காட்டப்படுகிறது. பால்பழத்திற்குப் பதிலாக மதுபர்க்கம் எனும் பால், தேன், தயிர் கலந்த கலவையையும் பயன்படுத்துவதுண்டு.

கோமாதா தரிசனம்

இல்லறம் தொடங்கும் புதுமணத் தம்பதிகள் பசுவைத்தரிசித்து அதனைப் பூசித்து அறுகம்புல், பழம் முதலியன உண்ணக் கொடுத்து வணங்கி சகல செல்வங்களையும் வேண்டுவர். சகல தேவர்கள் முனிவர்கள், தெய்வங்களும் பசுவில் உறைவதாலும் பசு ஒரு பெரு நிதி எனக் கொள்வதாலும் இவ்வாறு செய்யப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் பசுவை அங்கு கொண்டுவந்து பூசிக்க வாய்ப்பில்லாவிட்டால் ஒரு தேங்காயைப் பசுவின் பிரதிநிதியாக மணமக்களுக்குக் குரு காட்டி அதனைப் பூசிப்பதுண்டு.

சப்தபதி, பாணிக்கிரகணம்



ஏழடிநடத்தல் என்ற இந்த அற்புதமான நிகழ்ச்சி திருமண விழாவில் மிக முக்கியமான ஒன்றாகும். இந்த நிகழ்ச்சி நடந்தபின் மணமக் களைப் பிரிப்பதற்கு எந்த சட்டமும் இடம் கொடாது என்பர்

மணமக்கள் இருவரும் ஒன்றாக ஏழடி நடத்தல் என்பதே இதன்

அடிப்படையாகும். ஏழடியை நிர்ணயம் செய்வதற்காக நெல்லினால் ஏழு அடையாளம் செய்திருப்பர். அம்மி மிதித்தல் அடுத்த நிகழ்வாக இருப் பதால் அம்மி வரை அவ்வாறு ஏழு நெற்குவியல்களை இடுவர். மணமகன் மணமகளது கரங்களைப் பற்றியவாறு (குனிந்து மறு கையால் வலக்காலைப் பற்றி ஒவ்வொன்றாக எடுத்து வருதல் சில வகுப்பாரின் சம்பிரதாயம்) ஒவ்வோர் அடியாக எடுத்துவைத்து நடப்பர். முதலில் மாப்பிள்ளைத் தோழன், அதன்பின் மாப்பிள்ளை, அதன்பின் மணப்பெண், இறுதியாகத் தோழி என்ற வரிசையில் மணையை இவ்வாறு மும்முறை வலம் வருவர்.

ஏழு அடி ஒன்றாக நடந்தவர்களும் ஏழு வார்த்தைகள் உரையாடியவர்களும் நல்ல நண்பர்களாகிவிடுவர் என்பது வேதகால சம்பிரதாயம்.

"நிறைய அன்னம் கிடைக்கவும்,
நல்ல பலத்தை அளிக்கவும்,
நற்கர்மாக்களைச் செய்யவும்,
சுகத்தைக் கொடுக்கவும்,
பசுவையும் செல்வத்தையும் கொடுக்கவும்,
ஆறு ருதுக்களிலும் நன்மை உண்டாகவும்,
ரித்விக்குகள் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்யவும்,
ஏழு அடிகளிலும் விஷ்ணு உன்னைத் தொடர்ந்து வந்து அருள் செய்யட்டும்"

என்பதே சப்தபதி மந்திரத்தின் பொருளாகும்.

இதனைத் தொடர்ந்து சொல்லப்படும் ஒரு மந்திரத்தின் பொளையும் இங்கு நோக்கலாம்.

"பெண்ணே, ஏழடி தூரம் என்னுடன் நடந்துவந்த நீ எனக்கு சிநேகிதியாவாய். உன்னிடத்தில் நான் சிநேகம் கொள்கிறேன். நாம் ஒருவரை ஒருவர் பிரியமாட்டோம். நாம்

இருவரும் சேர்ந்து நற்கருமங்கள் செய்வோம். பரஸ்பரம் சுவை உள்ளவர்களாகவும் நல்ல மனமுடையவர்களாகவும் இருப்போம்.



நான் ரிக் (கவிதை), நீ சாமம் (இசை). நான் வானம், நீ பூமி. நான் மனம், நீ வாக்கு"

இவ்வாறு வலம் வரும்போது மணமகன் மணமகளது வலது கையினைத் தனது வலது கையினால் பற்றிக்கொண்டே நடப்பர். இதுவே பாணிக் கிரகணம் எனும் கைப்பிடித்தல் என்ற நிகழ்வாக எடுக்கலாம். வைதிக விவாகத்திலே மணவறையில் அமர்ந்திருக்கும்போதே பாணிக்கிரகணம் என்ற தனியான நிகழ்வு உண்டு. அந்த வேளையில் அங்கு சொல்லப்படும் மந்திரமும் அர்த்தபுஷ்டியானதே.

"ஓ, பெண்ணே, பகன், சூர்யன், அர்யமா, இந்திரன் மற்றும் தேவர்கள் உன்னை எனக்கு இல்லறம் நடத்தும்படி கொடுத்தார்கள். அவர்களது அருளோடு அவர்கள் சாட்சியாக நான் உன்னை மணக்கிறேன். நீயும் நானும் வயோதிபத்திலும் பிரியாதிருக்க வேண்டுமென உன் கையை நான் பிடிக்கிறேன்"

## அம்மி மிதித்தல்

அம்மி மிதித்தல்



முதலில் வலக்கால், அடுத்த தடவை இடக்கால், பின்னர் இரு கால்களும் என்ற வகையில் அம்மியின் மீது பெண்ணின் காலை மாப்பிள்ளை எடுத்து வைப்பது மரபு. அவ்வேளையில் கால் விரலில் மெட்டி எனும் வெள்ளி

மோதிரத்தைக் காலில் மாட்டும் சம்பிரதாயம் இன்று பெருவழக்காகிவிட்டது. மெட்டி திருமணமான பெண்ணிற்குரிய அணிகலனாகும்.

அம்மி கருங்கல்லால் ஆனது. கருங்கல் எவ்வாறு உறுதியாக உள்ளதோ அதேபோல் நமது வாழ்க்கையில் என்ன சோதனை வந்தாலும் உனது தர்மத்தில் நீ உறுதியாக இருப்பாயாக. எனப் பெண்ணிற்கு அறிவுறுத்துவதாக இது அமைகிறது.

## கணையாழி எடுத்தல்

அக்கினிக்குக் கிழக்கே வைக்கப்பட்ட மஞ்சள் கரைத்த நீர்ப்பாத்திரத்தினுள் ஒரு மோதிரம், எலுமிச்சம்பழம் என்பவற்றை குரு இட்டதும் சமகாலத்தில் மணமக்கள் தமது கரங்களை அதனுள் வைத்து அவற்றைத் தேடி எடுப்பர். இருவரும் சேர்ந்து மகிழ்வதற்காகவும் விட்டுக்கொடுத்து வாழும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வாறு செய்வர்.

## அருந்ததி காட்டுதல்

சப்தரிஷிகளி ஏழு பேரின் மனைவியர் கார்த்திகைப் பெண்களாவர். இவர்களில் வசிட்டரின் மனைவி அருந்ததி கற்பில் ஏனையோரைவிடச் சிறந்தவள் எனப் போற்றப்படுபவள். அதனால் சப்தரிஷி மண்டலமாகக் காணப்படும் நட்சத்திரக் கூட்டத்தின் அருகே அருந்ததிமட்டும் மிகச் சிறிதாகத் தென்படுவது வழக்கம். அந்த நட்சத்திரத்தைத் தரிசித்து கற்புநெறியை மனத்தில் இருத்துவது மரபு. பகல் வேளையில் நிகழும் கல்யாணங்களில் தீப ஒளியை பாவனையாகத் தரிசிப்பர்.

## அரசாணியை வழிபடுதல்.

மும்முறை சுற்றி வரும்போது அரசாணியையும் வழிபடுவதுண்டு. முள்முருக்கு இந்திரனைக் காட்டும் அடையாளம். அடுத்தவர் மனைவி ஆகிய அகலிகைமேல் ஆசைப்பட்டதால்

இந்திரன் அடைந்த தண்டனையை நினைவூட்டி ஆண்களுக்கும் கற்பு நெறி உண்டு என்பதை வலியுறுத்துவதாக அமைகிறது அரசாணி.



அரசும் ஆலும் சிவ சக்தியைக் குறிப்பன. (ஆல் விஷ்ணுவைக் குறிப்பது. விஷ்ணுவே சக்தி.) இவை இணைந்த சொல்லே அரசாணி என மருவிற்று என்பர். அரசு, ஆல், முருக்கு என்பன மும்மூர்த்திகளுக்கும் உரியன என்ற கருத்தும் உண்டு. இவை மூன்று கிளைகளையும் அரசாணியாக நடும் வழக்கம் முன்பு இருந்துள்ளது. இப்போதும் அரசமரக் கிளையை நடும் வழக்கம் பல இடங்களில் உண்டு. நம் நாட்டில் முள்முருக்கம் தடி நடும் வழக்கமே உண்டு. அதனைப் புதிய வெள்ளைத் துணி கொண்டு மூடிக் கட்டி ஏழு பகுதிகளாக பகுத்து அமைக்கவேண்டும்.

**லாஜஹோமம்.**

மணமக்கள் அக்கினியில் நெற்பொரியினை ஆகுதியாக வழங்கி மணவினையின் நிறைவில் நிறைந்த வாழ்வுக்காக அக்கினி தேவனைப் பிரார்த்திப்பதாக அமைகிறது இந்த நிகழ்ச்சி.

இந்நிகழ்வைத் தொடர்ந்து பூர்ணாகுதி கொடுத்து அக்கினி காரியத்தை குரு நிறைவு செய்து கும்பங்களில் அவற்றைச் சேர்த்து அவற்றுக்கான பூஜைகளையும் செய்து யதாஸ்தானம் செய்வதுடன் திருமணக் கிரியைகள் நிறைவுபெறுகின்றன. முடிவில் குரு மணமக்களை ஆசீர்வதித்து இருதரப்பாரும் வழங்கும் குருதட்சணைகளை மனநிறைவோடு பெற்று விடை பெறுகிறார்.

அறுகரிசியிட்டு வாழ்த்துதல்

முனை உடையாத பச்சரிசியை மஞ்சள் சேர்த்து (அட்சதை) அதனோடு அறுகம் புல்லினைத் துண்டுகளாக்கிச் சேர்த்துப் பரப்பி வைத்திருப்பார்கள். உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் மணமக்களிடம் வந்து அவர்கள் மீது அறுகரிசியைத் தூவி வாழ்த்துக் கூறித் தமது அன்பளிப்புக் களையும் வழங்கி மகிழ்விப்பர்.

"ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில்போல் சுற்றம் சூழப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்றொரு வாழ்த்துத் தொடர் உண்டு. அறுகு நன்கு வேர் ஊன்றிப் படர்ந்து வளரும் ஒரு தாவரம். அதைப்போல் மணமக்கள் பாரம்பரிய மரபு முறைகளை மறவாமலும் சந்ததி அறாமல் தொடர்ந்து வளரவும் தமது நல்லறவாழ்க்கையை நடத்தவேண்டும் என்பதை அறுகு சுட்டி நிற்கிறது. அரிசி இலக்குமியின் இருப்பிடம் (தான்ய லட்சுமி) நமது பாரம்பரியமான பிரதான உணவு.. எனவே செல்வச் செழிப்பையும் புஷ்டியையும் முழுமையான அரிசி சுட்டுகிறது. மஞ்சள் மங்களத்தை காட்டிநிற்கிறது.



அறுகரிசி போடும்போது சிரசு, தோள், பாதம் என மேலிருந்து கீழ்நோக்கி மும்முறை இருவருக்கும் தூவ வேண்டும். அல்லது சிரசில் மட்டும் போடலாம்.

ஆரத்தி எடுத்தல்

அறுகரிசியிட்டு முடிந்ததும் ஆரத்தி எடுத்தபின் தோழன் தோழி உடன்வர மங்கல வாத்தியத்துடன் நிறைகுடம்,

குத்துவிளக்கு முதலியவற்றை சுமங்கலிப் பெண்கள் ஏந்திவர வீட்டினுள் சென்று சுவாமி அறையில் வழிபாடு செய்வர்

பூதாக்கலம்.

முதன்முதல் மணமக்கள் ஒருவருக்கொருவர் தம்கையால் உணவூட்டுதல் பூதாக்கலம் என்பர்.

விருந்துண்ணுதல்

விருந்தினர் யாவரும் ஒன்றாயமர்ந்து விருந்தாடி மகிழ்வதோடு கல்யாணம் நிறைவுபெறுகிறது.


திருமணச் சடங்கின் பின் தொடரும் சில பொதுவான சம்பிரதாயங்கள்

விருந்துபசாரங்கள் நிறைவு பெற்ற பின்னர் கல்யாணம் மண்டபத்தில் நடந்திருப்பின் முதலில் பெண் வீட்டிற்கு மணமக்கள் செல்வார்கள். மணமகள் வீட்டிலிருந்து அன்று மாலை மணமகன் வீட்டிற்கு சென்று மீண்டும் மணமகள் வீட்டிற்கு வருவார்கள். இவற்றை வதூவர கிருகப் பிரவேசம் என்றும், கால்மாறுதல் என்றும் சொல்வர்.

மணமகன் இல்லத்தில் வசதியான ஒரு தினத்தில் வரவேற்பு வைபவமும் நடைபெறுவதுண்டு.

தங்கள் குலதெய்வத்தின் கோவிலுக்கும், அருகிலுள்ள வேறு கோவில்களுக்கும் மணமக்கள் சென்று வழிபாடு நடத்துவதும், நல்ல ஒரு நாளில் இருவருமாகக் கடைக்குச் சென்று முதன்முதல் ஏதாவது மங்கலப் பொருளை வாங்குவதும் வழக்கமாக உள்ளது.

## மணவறை ஒழுங்குகள்


வ
மே
கி
சந்திர கும்பம்
பாலிகை
சிவ சக்தி
கும்பங்கள்
அம்மி
அரசாணி
குத்துவிளக்குகள்
ஹோமம் செய்யும் மேடை
மணவறை
மணமக்கள்
புண்யாகம்
குரு
முதலியன
நவக்கிரகம்
நிறைகுடங்கள்

# தேவையான பொருட்கள்

மஞ்சள்மா
அரிசிமா
அட்சதை
விபூதி
சந்தனம்
குங்குமம்
கற்பூரம்
சாம்பிராணி
ஊதுவர்த்தி
தேங்காயெண்ணெய்
விளக்குத்திரி
தேங்காய் 20
மாவிலை
கும்ப நூற்பந்து
பன்னீர்
நெல்
பச்சரிசி
பயறு
உழுந்து
எள்ளு
நவதானியம்
நெற்பொரி
கற்கண்டு
சில்லறைக்காசு
வெற்றிலை
பாக்கு
வாழைப்பழம்
சரப்பந்து
பூமாலை
பூஜைக்குரிய பூப்பத்திரங்கள்
அறுகம்புல்

மணமக்களுக்கு
மாற்று மாலை 3 சோடி
பட்டுத்துண்டு 4
கும்ப வேட்டி
குருக்கள் வேட்டி சால்வை
அரசாணி வேட்டி
வாழையிலை
நிறைகுடம் 4
குத்துவிளக்கு 5
செம்புகள்-13
லட்சுமி விளக்கு 1
சிறிய கிண்ணங்கள்,
தாம்பாளங்கள் சிறியது 5
பெரியது 5
ஆரத்தித் தட்டு.
அரசாணிப்பீடம்
முள்முருக்கம் தடி
அம்மி, குளவி.
தானத்திற்கு
அரிசி காய்கறிகள் 2
கத்தி, சருவச்சட்டி
பால்
தேன்
ஹோமத்தட்டு, மண், உமி,
நெய், மாஞ்சமித்து,
பாலிகைக்கு
வாயகன்ற ஒரு சட்டி,
மண் (பாலிகைக்கு),
பட்டுச் சால்வை.
தேசிக்காய்

# கிரியைகள், சடங்குகளின்போது பயன்படும் சில மரபுவழிப்பட்ட பொருட்களின் சிறப்பு

தென்னை, மாமரம், வாழைமரம் முதலிய சில மரங்கள் முழுமையாகக் கிரியைகளுடன் தொடர்புபட்டவை. இவை, ஆலயக் கிரியைகளிலும் இல்லங்களில் நிகழும் பூர்வ, அபரக் கிரியைகளிலும் பயன்படுகின்றன.

மாஞ்சுள்ளி ஹோமத்தில் பயன்படுகிறது. மாம்பழம் அபிஷேகத்திற்கும் நிவேதனத்துக்கும் பயன்படும். மாவிலை கும்பம் அமைப்பதற்கும், தோரண அலங்காரத்திற்கும் உதவுகிறது.

**மாவிலை**

மாவிலை நல்ல அதிர்வினையும், சக்திச் சேமிப்பையும் கொண்டது. தோரணமாகக் கட்டப்படும்போது மங்கலமான நல்லதிர்வுகள் இருக்கும். பூர்வக் கிரியைகளில் உள்முகமாக வளைத்துச் சொருகப்பட்டு சக்தியை உள்ளே சேமிக்கப் பயன்படுகிறது. அமங்கலமான கிரியைகளின்போது துயரமான எண்ண அதிர்வுகளை வெளியே தள்ளிச் சூழலைச் சமநிலைப்படுத்தும் வகையில் வெளிப்புறமாக மடித்துச் சொருகப்படுகிறது.

கும்பத்தின் உருவாக்கத்திலே மாவிலையின் பங்கு மிக முக்கியமானது. இங்கு கும்பம் என்பது என்ன என்பதை முதலில் புரிந்துகொள்வது அவசியம்.

**கும்பம்**

பூரண கும்பமானது நிறைகுடம் என அழைக்கப்படுகிறது. குத்துவிளக்கேற்றி வைத்து அதனருகில் ஒரு பூரண கும்பம் வைத்துவிட்டால் அங்கு நிறைவான ஒரு மங்கலத் தன்மை வந்து விடும். மிக நீண்ட காலமாக இந்து - தமிழ் - மக்களின் பாரம்பரியமான மங்கலச் சின்னமாக அது விளங்குகிறது.

இந்தக் கும்பமானது சர்வ தேவதா ஸ்வரூபம் எனச் சொல்லப்படுகிறது. எந்தத் தெய்வ சக்தியையும் ஆவாகனம்

செய்து வழிபடுகின்ற ஓர் அதிஷ்டானமாக - அருவுருவ ஸ்தானமாக கும்பம் விளங்குகிறது. விரத பூஜைகளின் போது கும்பத்திலேயே தேவதைகளை எழுந்தருளச் செய்கிறோம். கும்பாபிஷேகத்தின்போது மூலமூர்த்தியிலிருக்கும் பெரும் சக்தியைத் தற்காலிகமாக கும்பத்தில் ஆவாகனம் செய்தே யாகசாலையில் எழுந்தருளச் செய்கிறோம்.

**தர்ப்பை**

இங்கு மாவிலையுடன் சேர்ந்து முக்கியத்துவம் பெறும் அடுத்த பொருள் தர்ப்பை. அது கூர்ச்ச வடிவில் அங்கு போடப்படுகிறது. கும்பாபிஷேக வேளையில் கும்பத்தினுள்ளே இன்னொரு கூர்ச்சம், பவித்திரம் என்பவையும் தர்ப்பையால் செய்து போடப்படுகின்றன.

தர்ப்பை நமது கிரியைகளில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒருவகைப் புல். மஹாவிஷ்ணுவின் அவதாரத்துடன் தொடர்புடையது இது. மிகவும் சக்திச் செறிவும் நல்ல அதிர்வும் உடையது தர்ப்பை.

கிரியைகள் செய்யும்போது தர்ப்பாசனத்தில் அமரும்படி சொல்லப்படுகிறது. நமது ஆன்மசக்தி பூமிக்குள் செல்வதை இது தடுக்கிறது. கிரியையின் தொடக்கத்தில் சங்கல்பம் எனப்படும் கிரியை உறுதிமொழியின் போது வலதுகை மோதிரவிரலிலே தர்ப்பையால் செய்யப்பட்ட பவித்திரம் அணியப்படுகிறது.

ஹோமத்தில் தர்ப்பை மிக முக்கியமாகப் பயன்படுகிறது. ஓமகுண்டத்தைச் சுற்றிப் போடப்படும் விஷ்டரம், பரிஸ்தரணம் என்பவற்றிலும் தொடுபுல், ஞானகட்கம், தர்ப்பைக் கயிறு எனப் பலவிதமான பிரயோகங்களிலும் தர்ப்பை சிறப்பிடம் பெறுகிறது.

**வாழைமரம்**

வாழை மரத்தை எடுத்துக்கொண்டால் மரமாகவே வாயிலில் அலங்காரத்திற்காகக் கட்டப்படுகிறது. வாழை இலையில்

தானியங்கள் பரப்பி அதிலேதான் கும்பம் வைக்கப்படுகிறது. வாழைமரம் அதன் இலை என்பன சூழலில் தோஷங்கள் - மாசுக்களை உறிஞ்சி நல்ல அதிர்வுகளை ஏற்படுத்திச் சக்திச் செறிவை உருவாக்குகின்றன. வாழையிலையில் உணவு பரிமாறிச் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது என்பர்.

வாழைப்பழம் முக்கனிகளில் ஒன்று. கனிந்த உள்ளத்தின் அடையாளச் சின்னமாக இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படும் முக்கிய பொருள் இது.

வாழைக்காயும், வாழைத்தண்டும் அபரக்கிரியைகளில் முக்கியம் பெறுகின்றன. பிதிர்தேவர்களுக்கு அவை பிரியமானவை. (வாழைப்பொத்தியும் உணவுக்காகப் பயன்படும் ஒரு பொருள் என்றாலும் பூர்வ, அபரக் கிரியைகளில் அது விலக்கப்படுவது மரபு)

**தென்னை**

தென்னங்குருத்தினான தோரணங்களும் மாவிலைகள் போல பூர்வம் அபரம் இரண்டிற்கும் தொங்கவிடப் படுகின்றன. பூர்வக் கிரியைக்கு மேல்நோக்கிய கோணத்தை உடையதாகவும் அபரக் கிரியைகளுக்குக் கீழ் நோக்கிய கோணத்தை உடையதாகவும் இத்தோரணங்கள் செய்யப்படுகின்றன.

வாழைமரம் மாவிலை தோரணம் முதலிய அலங்காரங்கள் ஆன்மீக உணர்வை மேம்படுத்தும் புறச்சூழலைத் தோற்றுவிக் கின்றன. இத்தகைய ஒழுங்கமைப்புக்கள் அந்த இடத்தில் சீரான ஒருவகை அதிர்வலைகளை ஏற்படுத்தி மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி உள்முகமான வழிபாட்டுக்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்கி விடுகின்றன.

இவ்வுலகில் பிறந்து வாழும் சீவான்மாக்களாகிய நாம் நமது உளப்பாங்கு, ஒழுக்கம், பக்தியுடன் கூடிய வழிபாடு, கிரியைகள் இவற்றின் மூலம் படிப்படியாகப் பக்குவமடைந்து

பெரும் சக்தியை நமக்குள் உருவாக்கிப் பரமான்மாவுடன் இணைந்துவிட வேண்டும். இதுவே நமது வாழ்வின் இலட்சியம்.

இதற்கு உதவுவதற்காகவே ஆலயங்களும் கிரியைகளும் சடங்குகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் உட்பொருளுணர்ந்து நாம் அவற்றில் ஈடுபட வேண்டும்.

## அனுபந்தம்

இந்நூலின் அனுபந்தமாக மிக முக்கியமான சில குறிப்புக்களை யாழ். கோண்டாவில், அகில இலங்கை சமாதான நீதிவான், சிவதொண்டன் செல்லப்பா தியாகராஜா கனகலிங்கம் அவர்கள் எழுதி வெளியிட்ட "மரபு தழுவிய திருமண நாண் பூணல்" என்னும் நூலிலிருந்து எடுத்துக் கையாளுகின்றோம். அவற்றின் முக்கியத்துவம் கருதி அவரைப் பாராட்டி நன்றிகூறிப் பயன்கொள்ளுகின்றோம். அந்நூலில் இடம்பெற்ற அழகிய படங்கள் சிலவற்றையும் பயன்படுத்தியுள்ளோம். அவற்றை வரைந்த ஓவியர் திரு பரமநாதன் தவநேசன் அவர்களையும் பாராட்டி நன்றி கூறுகிறோம்.

இன்றைய திருமணங்களில் நிகழும் பண் பாட்டுக்கு ஒவ்வாத சில நடைமுறைகளை கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் கவிதை ஒன்றில் நகைச்சுவையோடு கண்டித்தமையைக் கண்டு இரசித்தமையால் அக்கவிதையில் சில பகுதிகள் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. அவருக்கு எமது பாராட்டுக்களும் நன்றிகளும்.

# முக்கியமாக கவனிக்க வேண்டியவை

1. கோலம் :

விழாக்களின்போது கோலம் போடுவது,அரிசிமாவினால் மட்டுமே. கோலத்திற்கு அலங்காரம் செய்யும்போது, அலங்காரப் பொருட்களும் உயிரினங்கள் உணவாக உண்ணக்கூடிய பொருள்களாக வேண்டும்.

2. திருமண மண்டப அலங்காரம்:

அலங்காரம் செய்யும் போது வாழை பழுத்த குலையுடன், தென்னை ஓலைக்குருத்துத் தோரணம், கீழ் நோக்கி 5, 7 இதழ்களுடனும் பின்னப்பட்டு, மாவிலையின் உள்பக்கம் முன்பக்கத்திற்கு தெரியக்கூடியதாகவும் அமைக்கப்பட வேண்டும். குத்து விளக்கு 5, 7 முனைகளில் தீபம் ஏற்றப்பட வேண்டும்.

3. பூரண கும்பம்:

பூரண கும்பம் வைக்கும் இடத்தைச் சுத்தப்படுத்தித் தலை வாழை இலையின் தலைப்பக்கம் கிழக்கு நோக்கி, அல்லது வடக்கு நோக்கி வைக்கப்பட்டு, நடுவே நெல், அல்லது பச்சை அரிசி பரவி மேலே நன்னீர் நிறைந்த குடம் வைத்து 5 அல்லது 7 மாவிலை வைத்து நடுவே முடியுடன் கூடிய தேங்காய் வைக்கவேண்டும். இருபக்கங்களிலும் குத்து விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். அருகே வெற்றிலை, பாக்கு, பழம் வைத்துப் பசுவின் சாணம் அல்லது மஞ்சள் மாவினால் அறுகம்புல் சாத்திப் பிள்ளையார் பிடித்து, வைக்க வேண்டும். வீபூதி, சந்தனம், குங்குமம், பன்னீர் முதலியனவும் முன்பக்கத்தில் வைக்கப்படவேண்டும். நிறைவாகக் கும்பத்திற்கு மாலை சாத்திப் பிள்ளையாருக்கு மலர் சாத்த வேண்டும. பூரண கும்பத்திற்குப் பக்கமாக தோழன் மணமகனின் பாதங்களை கழுவுவதற்காக ஒரு சிறிய பாத்திரத்தில் நீர் வைத்து ஒரு தட்டத்தில் வரவேற்பு

மாலை வைக்கப்படுவதுடன், மணமகனை ஆரத்தி எடுப்பதற்காக ஒரு தட்டத்தில் மூன்று இடங்களில் நெய்த்திரி பொருத்திய வாழைப்பழத் துண்டுகள் இருத்தல் வேண்டும்.

4. மணமகனின் தலைப்பாகை, உத்திரியம்:

மணமகனுக்கு தலைப்பாகை வைக்கும்போது மன்பக்கம் உயரமாகவும், பின்பக்கம் பதிவாகவும் இருக்க வேண்டும். உத்திரியம் வலது தோள் பக்கம் போட்டு இடது பக்கம் இறங்கி வரவேண்டும். (அரசனின் உறைவாளுக்குச் சமனாக இருக்க வேண்டும்.) தோழனுக்கு இடது பக்கத்தோளில் போட்டு இறங்கி வலது பக்கம் வரவேண்டும். இவை பாரம்பரிய முறையாகும்.

5. மாப்பிள்ளை அழைப்பு:

திருமண நாளிற் சுபவேளையில் மணமகனின் தோழனுடன், பெரியவர்கள், சுமங்கலிப் பெண்கள், 5,7,9,11,15 என்ற எண்ணிக்கையில் அழைக்கச் செல்லவேண்டும். செல்லும் போது 1,3,5 எண்ணிக்கையான தட்டங்களில் மங்களப்பொருள்கள், பலகாரங்கள், கற்கண்டு இப்படியானவற்றை வெள்ளைத்துணியால் மூடி எடுத்துச் செல்லுதல் சிறப்பாகும்.

6. மங்கலப் பொருள்கள்:

மஞ்சள், திருநீறு, சந்தனம், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம் பழம் பன்னீர், தேங்காய், மலர்கள்

7. மணமகள் அழைப்பு, அல்லது பூப்புனித நீராட்டுதல் (சாமத்தியம்):

திருமண நாள் அன்று சுபவேளையில் மணமகன் வீட்டில் இருந்து மணமகளை அழைப்பதற்கு அல்லது சாமத்தியச் சடங்கு செய்யப் போகும்போது பெரியவர்கள், சுமங்கலிப் பெண்கள் 5,7,9,11 என்ற வகையில் மங்கலப்பொருட்கள் மற்றும் பலகாரம், கற்கண்டு, மலர்கள் போன்ற பொருட்களைக் கொண்டு செல்வர். பெண்வீட்டினர் பெண்ணை நீராட்டுவதற்கு வேண்டிய ஒழுங்கு

களை செய்து வைப்பர். பெண்ணை அழைத்துவந்து கிழக்கு முகமாக இருத்திப் பால், அறுகு, (பணம்) காசு சிரசின் மேல் வைத்து நீராட்டுவர். தொடர்ந்து அலங்காரம் செய்து மண மேடையில் கிழக்கு முகமாக நிற்கச் செய்து பெண்ணின் கைகளில் தாய் நிறைகுடம் கொடுக்கத் தந்தை மலர் மாலை அணிவிப்பார். தொடர்ந்து முதலில் நிறைநாழி (ஒரு தட்டத்தில் கொத்து நிறைவாக நெல் அதில் காம்புச்சத்தகம் குத்தி வெற்றிலை முன்பக்கம் தெரியக்கூடியதாக பின்னப்பட்டு முன்பக்கத்தில் அஷ்டலக்சுமி தீபம்) முன்பக்கம் பார்க்க பெண்ணின் வலது பக்கமாக ஆரத்தி எடுத்து மேல் ஏத்தி தலைக்கு மேல் பின்பக்கம் இறக்கி கொடுக்கவேண்டும், இரண்டாவதாக தாம்பூலம் (வெற்றிலை, பாக்கு, பழம்), மூன்றா வதாக பிட்டு ஒருதட்டத்தில் மூன்று மூலைப்பிட்டு, நான்காவதாக மூன்று கழித்தழிசைகள், ஐந்தாவதாகப் பலகார வகைகள், ஆறாவதாக சோறு - கறிவகைகள், ஏழாவதாக நிறைகுடம், எட்டாவதாகத் தட்டத்தில் எட்டு பால் ரொட்டிகள் வேப்பிலை களுடன் (மூன்று முறை ஆரத்தி எடுத்ததும் பால் ரொட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்து பெண்ணின் தலையின் மேல் உடைத்து எட்டுத்திசைகளிலும் எறிவார்கள்), ஒன்பதாவதாக ஆரத்தி. இவையனைத்தும் இருபக்கத்துச் சுமங்கலிப் பெண்களும் மூன்று முறை ஆரத்தி எடுப்பார்கள். இறுதியாக வயதில் முதிர்ந்த சுமங்கலிப் பெண் ஒருவர் இளநீர் அல்லது நீற்றுப் பூசனிக்காயிற் குடம் ஏற்றித் திருஷ்டி கழிப்பார். ஆரத்தி எடுத்த சாமான்கள் நிறைநாழி தவிர்ந்த அனைத்தும் பின்பக்கமாக வைக்கப்பட்டுக் குடிமக்களிடம் கொடுக்கப்படும். நிறைநாழி, பூரண கும்பம். தீப விளக்கு அனைத்தும் பெண்ணை வணக்க அறைக்கு அழைத்துச் செல்லும்போது வயது முதிர்ந்த (சுமங்கலி) பெண்களால் எடுத்துச் செல்லப்படும். பெண்ணை வீட்டிலுள்ள வணக்க அறைக்கு அழைத்துச் சென்றதும் பெண்ணின் கைகளில் உள்ள நிறைகுடத்தைத் தாய்மாமன், மாமி இருவரும் வாங்கிக் கொண்டு வெகுமதியாகப் பொன், பொருள் கொடுப்பர்.

8. மணமகன் மணவறைக்குக் கொண்டும் வரும் பொருள்கள்:

திருமணநாள் அன்று மணமகன் மணமேடைக்கு வரும் போது கொண்டு வரவேண்டியவை: கொடியிற் கோக்கப்பட்ட தாலி, மெட்டிகள், கூறைச்சேலைசார்ந்த உடுபுடவைகள், மங்கலப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், அரிசி, தேங்காய் தட்டம் மூன்று, முடியுடன் கூடிய தேங்காய் 5 தானத்திற்கு 05, தானத்திற்கு அரிசி, காய்கறிகள், மணமாலைகள் 02, கிரியாக்குருக்கள் வேட்டி சால்வை, மங்களப்பொருள்கள், பலகார வகைகள், கற்கண்டு எல்லாமாக 05, 07 தட்டங்களில் பெரியவர்களும், சுமங்கலிப்பெண்களும் எடுத்து வருவர். ஆலய வணக்கத்திற்கு உரிய பழம், பாக்கு, வெற்றிலை, சூடம், தேங்காய் என்பனவும் கொண்டு வருவர்.

9. மணமேடை உதவி ஆட்கள்:

திருமணவிழாவின்போது பங்குபற்றும் ஆண்கள் பெரியவர்களாகவும், மங்கள வாழ்வுடையவர்களாகவும் இருக்க வேண்டும். பெண்கள் சுமங்கலிப் பெண்களாக இருப்பதுடன் தலைவிரிகோலத்தை முக்கியமாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

10. மணமகன் தாலி கட்டுதல்:

மணமகன் தாலிகட்டும் போது உதவியாக இருக்கும் நெருங்கிய உறவினர்களாகிய மங்களப் பெண்கள் தீபவிளக்கு ஏந்திநிற்பது போன்ற உதவிகளைச் செய்யலாம். மணமகன்மட்டும் தான் தாலி கட்டித் திலகமிட வேண்டும். தாலியில் ஏனையவரது கைபட விடுவது தவறு என்பதை உணர வேண்டும்.

11. மணவறைக்குப் பெண் வீட்டினர் கொண்டும் போகும் பொருள்கள்:

மங்கலப்பொருள்கள்: தேங்காய் - 5 (முடியுடன் கூடியது), மாற்று மாலைகள் - 04, பலகார வகைகள், பாலிகைச் சட்டிகள் 03 அல்லது 05, கிரியா குருவிற்கான தானத்திற்குரிய அரிசி,

காய்கறி, கற்கண்டு முதலியன. 05 அல்லது 07 தட்டம் கொண்டு வருவது வழமை.

12. பரிசக்காசு கொடுப்பது:

திருமண விழாவிற்கு சுபநாள் குறித்தும், வேள்வு விருந்து கொண்டாடி நிச்சயதார்த்தம் நிறைவெய்தியதும் திருமணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்காக "பரிசக்காசு" என்னும் சிறப்புப் பணம் பெண் வீட்டினர் மணமகன் வீட்டினருக்குக் கொடுக்கும் முறைமை உண்டு.

13. திருமண விழா கலியாண மண்டபத்தில்:

திருமண விழா கலியாண மண்டபத்தில் நடப்பதானாற் பெண் வீட்டினர் தங்கள் சொந்த வீட்டில் செய்வது போல் சகல ஆயத்தங்களையும் அங்கே செய்யவேண்டும். மணமகன் மணவறைக்கு வரும்முன் மணப்பெண் கலியாண மண்டபத்திற்கு வரவேண்டும். விருந்தினரை வரவேற்பது இருபகுதியினரும் தமது வசதிக்கேற்பச் செய்து கொள்ளலாம். விருந்தினரை உபசரிப்பதில் இருபகுதியினரும் பங்குபற்றிக் கொள்ளலாம்.

14. மணமக்கள் ஆசீர்வாதம்:

திருமண விழாவில் மணமக்களை ஆசீர்வதிக்கும்போது இருகைகளிலும் அறுகுஅரிசியை எடுத்து முதலில் சிரசிலும், அடுத்து தோள்களிலும், மூன்றாவது முழந்தாளிலுமாக மூன்றுமுறை போடடு வாழ்த்த வேண்டும். மாறான வகையில் அறுகரிசி போட்டு வாழ்த்துவது முறையன்று.

15. மாலை மாற்றுதல்:

தாலி கட்டியதும் மாலை மாற்றுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். "இனியாம் இருவரில்லை ஈருடற்கோருயிர் என்றாகிவிட்டோம் எம் சிந்தனை, செயல் ஒன்றாகவே இருக்கும்" எனும் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையே இந்த மாலை

மாற்று நிகழ்வு இடம்பெறுகிறது. மாலை மாற்று நிகழ்வதற்கு முன் மணமக்களை கழுத்துகளில் இவ்விரண்டு மாலைகளாவது அணிந்திருக்க வேண்டும். அவ்வண்ணம் இருந்தால் இத்தேவை நிறைவிற்கு வாய்ப்பாக இருக்கும்.

16. அரசாணி:

மணவறைக்கு முன் கும்பங்களுக்கு நடுவே வைக்கப்படும் அரசாணியானது அரசும், ஆலும் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் குறிப்பதாகும். அரசு, ஆல் இவை வழக்கத்தில் அரசாணி என மாறியதனால் அரசாணி என அழைப்பர். அரசு, ஆல், முள்முருக்கு ஆகிய மூன்றும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பற்குரிய மரங்களாகும். இவை மூன்று கிளைகளையும் அரசாணியாக நடும் வழக்கம் உண்டு. எமது நாட்டில் முள்முருக்கம் கிளையை மட்டும் நாட்டி அரசாணியாக வழிபடுகின்றனர். அரசாணியாக நடப்படும் முள்முருக்கம் கிளை 7 அடி உயரம் உடையதாய் கெட்டுக்கள் இல்லாத கிளையாய் இருக்கவேண்டும். சில திருமணவிழாக்களில் அனுபவம் இல்லாதவர்கள் தவறுதலான முறையில் நடுவில் ஒரு 5 அடி குழாய் வைத்து இரண்டு அடிக்கு மட்டும் முள்முருக்கம் கிளையை வைத்துத் தமது அறியாமையைக் காட்கிறார்கள். இது எங்கள் துர்அதிர்ஷ்டம். இப்படிச் செய்வதை முக்கியமாகத் தவிர்க்க வேண்டும். அரசாணிக்கு அலங்காரமாகப் பலவித பட்டாடை கட்டி அழகுபடுத்துகிறார்கள். அரசாணிக்கு வெள்ளைநிறப் புதிய துணி கட்டி, ஏழாகப் பிரித்து, பந்து உருவில் அமைத்துத் தடைபோடப்பட வேண்டும். அரசாணி வணக்கத்திற்குரியது என்பதை மனதிற் கொள்ளவேண்டும்.

17. மாங்கல்யம் பூண்டதும்:

மணமகனும், மணமகளும் சிவனாகக் கணிக்கப்படும் மணமகனின் இடதுபக்கத்திற் சக்தியாகக் கணிக்கப்படும் மணமகள் இருப்பதும், நிற்பதும் இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்து,

செயற்பட வேண்டியதும் முதியோரினால் அறிவுறுத்தப்பட வேண்டியதும் கடமையாகும்.

## 18. திருமண விழாவிற் கிரியா குருதானம்:

திருமண விழாவின்போது, மணமகன் தாலி, கூறை கொண்டுவரும் தட்டத்தில் உள்ள அரிசி, காய்கறி, தேங்காய், என்பவற்றைத் தெட்சனை வைத்துத் திருமணம் நிறைவேறியதும் மணமக்கள் இருவரும் கிரியா குருவுக்குத் தானமாகக் கொடுத்து, அவரின் ஆசியைப்பெற்றுக்கொள்வர்.

## 19. ஆலய தரிசனம்:

திருமண விழா நிகழும் நாளில் மணமக்கள் ஆல்ய தரிசனம் செய்வது சிறந்தது. அன்று வசதியில்லாது போனால் திருமணம் நிறைவேறி மூன்று நாட்களுக்குள் தம்பதியர் ஆலய தரிசனம் செய்வது சிறப்புடையது. இது நாள் கோவில் தரிசனம் என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

## 20. திருமண ஊர்வலம்:

திருமணநாளில் மணமகன், மணமகளுக்கு மங்கள நாண் பூண வரும் போது மணமகள் வீடு அல்லது திருமண மண்டப வாசலின் இடது திசையில் இருந்து வரவேண்டும். திருமணம் நிறைவேறியதும் நாயகியுடன் தம்பதிகளாக வாசலுக்கு வலது திசையாக வெளியேற வேண்டும். மணமகன் வந்த பாதையால் மணமக்கள் செல்வதையும், மணமக்கள் செல்லும் பாதையில் வேறு மணமக்கள் செல்வதையும் எதிர்கொள்வதையும் தவிர்த்தல் வேண்டும்.

# திருமண விழாவின் போது தவிர்க்கப்பட வேண்டியவை

01. மணமகன் நீராடியதும் தமிழர்களின் தேசிய உடையான வேட்டி சால்வை, உத்தரியம், தலைப்பாக அணிய வேண்டும். அன்னிய உடைகள் உடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

02. மணமகன் தனது கால்களில் உறைகள் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

03. முக்கியமான திருமண வைபவம் நடைபெறுகையில் தாய்மாமன் அல்லது வயதில் மூத்த மங்கல வாழ்வுடையர் தான் தலைப்பாகையுடன் வடக்கு நோக்கி நோக்கி இருந்து தேங்காய் உடைக்க வேண்டும். தகுதியில்லாதவர்கள் தேங்காய் உடைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

04. திருமண விழாவிற்குத் தகுதியும், அனுபவமும் நிறைந்த கிரியா குருவைத்தான் வைக்க வேண்டும். அனுபவமில்லாத தகுதியில்லாத குரு திருமணக் கிரியை செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

05. மணப்பெண் புனிதநீராடி, அலங்காரம் செய்து கொண்டதும் நேராகத் திருமணம் நிறைவேறும் இடம் நோக்கிச் செல்ல வேண்டும். பல பேர் புழங்கும் அழகுக் கலைஞர்களின் வீடு சென்று அதன்பின் மணவினை நிறைவேறும் இடம் செல்வதைத் தவர்க்க வேண்டும்.

06. தலைவிரி கோலத்தில் எந்தப்பெண்ணும் திருமணம் நடைபெறும் இடத்திற்குச் செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

07. திருமணம் நிறைவேற்றி வைக்கும் இடத்தில் சுமங்கலிப் பெண்களும், மங்கல வாழ்வுடைய பெரியவர்களும்தான் நிற்கலாம். கன்னிப்பெண்கள், கர்ப்பிணிப்பெண்கள், விதவைகள் அங்கு போவதையும் பங்குபற்றுவதையும் தவிர்க்க வேண்டும்.

8. திருமணம் நிறைவுற்றதும் மங்கல வாழ்வுடைய ரெியவர்களும் சுமங்கலிப்பெண்களும்தான் மணமேடைக்குச் சென்று 16 செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்க என மனதார வாழ்த்த வேண்டும். தகுதியில்லாதவர்களும், இளவயதினரும் வாழ்த்தப் போவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

9. திருமணம் நிறைவேறி மணமக்கள் மணமகன் வீடு சென்று திரும்ப மணமகள் வீடு வந்து திருமணம் நிறைவேறிய இடத்திற்கு கால்மாறிய பின் தான் பந்தல் குலைப்பதும், கும்பம் கலைப்பதும், அரசாணி கழட்டுவதும் நாட்சேலை அவிழ்ப்பதும் நடைபெற வேண்டும். இடையிற் கலைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

10. திருமண வைபவம் நடைபெறும் மேடையில் வாழ்த்து தெரிவிப்பவர்கள் படப்பிடிப்பாளர்கள், வீடியோ படப்பிப்பாளர்கள், பாதணிகளுடன் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

11. மணமகன் புறப்படும்போது அல்லது தலைப்பாகை வைக்கும்போது அல்லது முக்கிய நிகழ்வான தாலிகட்ட முற்படும் போது சற்றுப்பொறுக்கும்படி சொல்வது தவிர்க்கப்பட வேண்டும். முக்கியமாக படப்பிடிப்பாளர்கள், வீடியோ படப்பிடிப்பாளர்களை ஒழுங்கு செய்தவர்கள் கவனிக்க வேண்டும்.

12. திருமணத்திற்கு மணமகன் புறப்படும் போது வெளியே வந்து வாகனத்திற்காக காத்திருப்பது தவிர்க்கப்படவேண்டும்.

13. திருமண விழாவின்போது நியமித்த சுபநேரத்தைக் கவனிக்காது காலதாமதம் ஏற்படச்செய்து பின் மணப்பெண்ணின் மடியில் கூறையை வைத்து மணமகன் தாலிகட்டுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

14. மணமக்களை வாழ்த்தும்போது அரிசி, மஞ்சள்மா, அறுகம்புல் என்பவற்றைச் சேர்த்து அறுகு அரிசியை இருகைகளிலும் எடுத்து மேல் இருந்து கீழ்நோக்கிச் சிரசில் அல்லது சிரசு, தோள்கள், முழந்தாள் இப்படி மூன்று முறை போட்டு வாழ்த்த வேண்டும்.

வெறும் அரிசியை போட்டு வாழ்த்துவதையும் கீழ் இருந்து மேல் நோக்கிப் போவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

15. கிரியா குருவானவர் திருமண மேடையில் அமர்ந்து சங்கற்பம் செய்யத் தொடங்கியதும், தொடர்ந்து கிரியைகளைச் செய்து நிறைவேற்ற வேண்டும். காரணமில்லாமல் இடையில் எழுந்து சென்று மீண்டும் வந்து கிரியைகள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

## பதினாறு பேறுகள்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமி யே!!

- அபிராமி அம்மை பதிகம்

# கல்யாண (ம்) வை! போவமோ!

-கம்பவாரிதி. இ.ஜெயராஜ்

உலகை மகிழ்விக்கும் சொற்களுள்
கல்யாணம் என்பதும் ஒன்று
உறவு நிறைவு குதூகலம் கொண்டாட்டம்
இப்படி சந்தோசம் தரும் அனைத்து விடயங்களையும்
உள்ளடக்கிய பெருமை கல்யாணம் என்னும்
சொல்லுக்கு உண்டு.
ஓர் ஆணையும் பெண்ணையும் முழுமையுறச் செய்யும்
இனிய வைபவமே அது!
ஒழுக்கயீனமாய் உரைக்கப்படும் உறவை
ஒழுக்கமாய் ஆக்கும் அற்புதக் கிரியை அது!
ஊருக்கு அஞ்சி ஒதுங்கும் உறவை
ஊர் கூட்டி அறிவிக்கும் ஒப்பற்ற நிகழ்வு அது!
சந்ததி விருத்திக்காய் ஆணுக்குள்ளும் பெண்ணுக்குள்ளும்
இயற்கை அமைத்த ஏக்க எழுச்சியை
சாந்தி செய்யும் சடங்கு அது!
அறவாழ்வுக்காய் அமைக்கும் அடிப்படை அது!
ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைக்கப்படும்
அசையாத உறவுப்பாலம் அது!
அன்பு விருத்தியின் அத்திவாரம் அது!
உலக இயக்கத்தின் ஊற்று அது!
இவ்வைபவத்திற்காய் கனவோடு காத்திருக்கும்
இளையோர் தொகை எண்ணிலடங்காது.
அதனால்தான் "கல்யாண வைபோகமே" என
அதனைக் கொண்டாடிற்று நம் தமிழுலகு.
ஆனால்
நான் இக்கட்டுரையில் எழுதப்போவது அதன் பெருமை பற்றியல்ல
இன்றைய நிலையில்
அவ் அரிய நிகழ்வுக்கு ஏற்பட்டிருக்கும் அவலத்தைப் பற்றி!

விரும்பினால் நீ கல்யாணத்தை வை!
மானம் இருந்து நாங்கள் மறந்தும் அதற்குப் போவமே?
என கேட்க வேண்டி வந்திருக்கும் நிலை பற்றியே இக் கட்டுரை.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

ஒரு காலத்தில் கல்யாணம் என்பது
புனிதம் போற்றுதல் பொழிவு
என் தமிழர்களை மகிழ்வித்த தலையாய வைபவம்.
இன்றோ
மூடத்தனம், பணத்திமிர், விரசம்
ஆடம்பரம், அகந்தை, அலட்சியம், அநாகரிகம், அடிமைப்புத்தி
என்பவற்றின் வெளிப்பாடாய் அது ஆகி விட்டது.
கல்யாணத்திற்கு இருக்க வேண்டிய புனிதம் எல்லாம் போய்
வீண்விரய விரச வைபவமாக அது ஆக்கப்பட்டிருக்கிறது.
இவ் அசிங்கத்தைத் தடுக்க முடியாதா?
தெரியாத்தனமாய் எனக்குள் புகுந்துவிட்ட இனப்பற்று தூண்ட,
மாரித்தவக்கையாய் நான் கத்தியும் ஏதும் ஏதும் நடக்காது.
என்று தெரிந்தும்
என் ரோஷக்காரப் பேனா இழுக்க எழுதத் தாடங்குகிறேன்.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

ஈழத் தமிழர்கள் மொழப்பற்று மிக்கவர்கள்!
அடிமைத்தனத்தை விரும்பாதவர்கள்!
பண்பாட்டைப் பேணுபவர்கள்!
பக்தி மிகுந்தவர்கள்!
சிக்கனமானவர்கள்!
விருந்தோம்பலில் சிறந்தவர்கள்!
போரால் வறுமையுற்றிருப்பவர்கள்!
இப்படியெல்லாம் உலகம் நினைக்கிறது.
இப்படி நினைப்பவர்கள்,
கொழும்பில் நடக்கும் ஒரு கல்யாண வீட்டைப் பார்த்தார்களானால்
அடுத்த நிமிடம் தம் எண்ணம் அத்தனையும்

மாற்றிக்கொள்வார்கள்........

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

முப்பதின் மேல்
சாதி, சாதகம், சீதனம் என்ற கடல்கள் எல்லாம் தாண்டி
ஆசைகள் அறுந்து போக ஆயத்தமாகும்போது
கலியாணம் நிச்சயமாகிவிட்டால்
அதன் பிறகு நடக்கும் கூத்துகளுக்கு ஓர் அளவேயில்லை.
கலியாணத்தில் அக்கறை இல்லாததுபோல் இருந்த
மாப்பிளையும் பொம்பிளையும்
கலியாணம் நிச்சயமானதும் படும்பாடு இருக்கிறதே
கண்டறியாதவன் பெண்டிலைக் கண்டால்
காடு மேடெல்லாம் கொண்டு திரிவானாம்
என்ற கதை தான்
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

பெண் வீடு
கல்யாணத் திகதி நிச்சயமாகி விட்டாதா?
ஐயரை ஒழுங்கு பண்ணுவதோ,
மண்டபத்தை ஒழுங்கு பண்ணுவதோ,
மேளத்தை ஒழுங்கு பண்ணுவதோ,
எல்லாம் பிறகு தான்.
முதலில் நீங்கள் செய்ய வேண்டியது
"பியூட்டிசியனையும்" "வீடியோ கமராவையும்" புக் செய்வதுதான்
பிந்தினீர்களோ அவர்கள் கிடைக்கமாட்டார்கள்.
ஐயர் என்ன ஐயர்? அவையெல்லாம் ஆயிரம் பேரைப் பிடிக்கலாம்.
கிரியைகள் எல்லாம் வெறும் சம்பிரதாயத்திற்குத் தான்!
நேரம் மிச்சமாய் இருந்தால்
கிரியைகளைக் கூட்டுங்கோ என்றால் ஐயர் கூட்டுவார்.
குறையுங்கோ என்றால் ஐயர் குறைப்பார்.

மந்திரங்களையும் "பிளாசிபில்" ஆக்கி வைத்திருக்கினம்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

உந்தச்' சேட்டையெல்லாம்
"பியூட்டிசியனிட்டையோ? வீடியோகாரனிட்டையோ" நடவாது!
அவையள் சொன்னாச் சொன்னதுதான்.
அவையள் நீட்டு என்றால் நாங்கள் நீட்ட வேண்டியதுதான்
அவையல் குறை என்றால் குறைக்க வேண்டியதுதான்
நேரத்தைச் சொல்கிறேன்.
கூறை மாத்திறத்திற்காகவும்
வீடியோ "செற்" பண்ணிறதுக்காகவுமாக
எத்தனையோ இடத்தில் முகூர்த்தம் தாண்டி தாலி கட்டப்படுகிறது.
ஐயருக்கு பத்தாயிரம் கொடுக்க பேரம் பேசுகிறவர்கள்.
அலங்காரகாரருக்கு இரண்டு லட்சத்தை
"வெறி சீப்" என்று கொடுக்கும் அழகைப் பார்க்க வேண்டுமே,
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

என்னது? "பியூட்டிசியனுக்கு" இரண்டு லட்சமோ?
இரண்டு லட்சத்துக்கு என்ன மயிரைப் பிடுங்கப் போகிறார்கள்?
சரியாய் சொன்னீர்கள்.
மயிர் பிடுங்குவதுதான் அவர்கள் முதல் வேலை.
சத்தியமாய் நான் சொல்வது உண்மை!

* * * * * * *

மூகூர்த்தத்தன்றுதான் மாப்பிள்ளையிடம்
பெண்ணை ஒப்படைப்பீர்கள்.
ஆனால் "பியூட்டிசியனிடமோ"
அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே
பெண்ணை நீங்கள் ஒப்படைக்க வேண்டும்.
மகளைக்கூட்டிக் கொண்டு நல்ல நாள் பார்த்து
அங்கு செல்வீர்கள்.

வாசலில் தொங்கும் "சலூன்" என்ற பெயரே
உங்களுக்கு நெருடும்.
பொம்பிளையளுக்கு இங்கு என்ன வேலை?
கேட்க நினைத்து அடக்கிக் கொள்வீர்கள்.
அலங்கார நிலையத்திற்குள்ளே சென்றதுமே
உங்களுக்கு ஒரு சிலிர்ப்பு வரும்.
"ஏசி" குளிரால் அல்ல
பிதுங்கும் "ஜீன்சோடும்" "ரீ சேட்டோடும்"
ஒரு பத்து இளம் பெண்களாவது உள்ளே வலம் வருவார்கள்
அவர்களைப் பார்த்து!
கறுத்த வெள்ளை முடிகளைத்தானே இதுவரை கண்டிருக்கிறோம்.
அங்கோ
வானவில் வண்ணங்கள் தலையில் ஜொலிக்க
அந்தப் பெண்கள் வலம் வருவார்கள்
உங்களுக்கு சற்று அச்சம் கலந்த வியப்பு வரும்.
ஓகோ இதுதான் இப்பத்த "பஷன்" ஆக்கும்
அடிமைப்பட்டு பழகிய நீங்கள் இப்படி நினைத்துக் கொள்வீர்கள்.
சாயப் பானையில் தலையைக் கொடுத்த
நரிக்தையைப் படித்து என்ன பிரயோசனம்?
உதட்டில் சாயமா? சாயத்தில் உதடா?
அவர்கள் முகம் காண அடுத்த சந்தேகம் வரும்.
விடை காணும்முன் உங்கள் மகளின் கையில்
அவர்கள் ஓர் அல்பத்தைத் திணிப்பார்கள்.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

விதம் விதமான அலங்காரங்களுடன்
அழகிய பெண்களின் படங்கள் அதனுள் இருக்கும்.
ஐஸ்வர்யாராயும் அதனுள் சிலவேளை அமர்ந்திருப்பா.
பிறகென்ன?
உங்கள் மகள் தனது முப்பதைத் தாண்டிய முத்திய முகத்தை
"ஜீன்சில்" நடித்த இருபது வயது ஐஸ்வர்யாராயுடன் ஒப்பிட்டு
அடுத்த உலக அழகுராணி நான் தான் என

கற்பனை பண்ணிக் கொள்வாள்.
அந்தப் பலவீனத்தில் "பியூட்டிசியன்" தரப்போகும்
இரண்டு இலட்சம் பில் இருபது ரூபாயாய் அவளுக்குத் தெரியும்!
அவளுக்கு காசாவது (கு)பீசாவது
அமெரிக்க அண்ணன் இருக்கும் வரை.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

உங்கள் மகளின் சரணாகதியை அறிந்து
அவர்கள் கிரியைகளை ஆரம்பிப்பார்கள்.
குளிர் நிறைந்த அறைக்குள் அழைத்துச் சென்று
பல்லு டாக்டரிடம் இருக்கும் படுக்கைக் கதிரைபோல்
ஒன்றில் உட்கார வைத்து
பளீர் பளீரென லைட்டுகளைப் போடுவார்கள்.
படுத்திருக்கும் உங்கள் மகளுக்கு நித்திரை
கொள்ளாமலே கனவு வரும்.
சிம்ரன், ஸ்ரேயா, நயன்தாரா, என
பல நடிகைகளும் முன்னிருக்கும் கண்ணாடியில் வந்து போக
அவள் கிறங்கிப் போவாள்!

* * * * * * *

அவர்களின் முதற் கிரியை ஆரம்பமாகும்.
உங்கள் மகளின் முகத்தில் இருந்த
இமை மயிர் புருவமயிர் எல்லாம் வலிக்க வலிக்க பறிக்கப்படும்.
அழகு ராணி ஆவதென்றால் சும்மாவா?
என்று நினைத்தபடி வலியைப் பொறுத்துக் கொள்வாள் மகள்
மொட்டையும் அடித்தால் சமணத் துறவிதான்!
இயற்கையாய் இருந்த முடியைப் பறித்து விட்டு
செயற்கையாய் அவளுக்கு "ஐபிறோ" கீறப்படும்.
கல்யாணம் முடிந்து ஒரு கிழமை கழித்து
எல்லா மயிரும் தடித்தடியாய் திருப்பி முளைக்கும்.
ஆபத்தைத் தவிர்க்க அத்தானிடம் சொல்லி

அவளும் "சேவிங் செற்" வேண்ட வேண்டியது தான்,
ஏன் பொம்பிளையள் "சேவ் எடுக்கக்கூடாதே?
உங்கள் மகளின் கேள்வி காதில் விழுகிறது.
வாழ்க பெண்ணியம்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

※ ※ ※ ※ ※ ※ ※

பிறகு அடுத்த கிரியை தொடங்கும்.
முகம் முழுவதும் வெள்ளையாய் ஏதோ பூசுவார்கள்
கண் மூடிக் கிடக்கும் மகள்
அழகு வந்து விட்டதாக்கும் என கண்ணைத் திறப்பாள்
உங்களுக்கு பழைய படங்களில் பார்த்த
வேதாளங்கள் ஞாபகத்தில் வரும்.
உங்கள் மகளைப் பார்த்து நீங்களே கூக்குரலிடவும் கூடும்.
"சோடனை மேல் சோடனை போதுமடா சாமி"
உங்கள் காதுகளில் தங்கப்பதக்க சிவாஜியின் பாடல்
மாறிக்கேட்கும்.
இருளில் இருந்துதானே ஒளி வருகிறது.
அதுபோல இந்த அசிங்கத்திலிருந்து தான் அழகு வருமாக்கும்.
தத்துவமாய் உங்களைத் தேற்றிக் கொள்ளுவீர்கள்.
அந்த அளவில் முதல் நாள் கிரியைகள் முடிவுறும்.

※ ※ ※ ※ ※ ※ ※

பியூட்டிசியனுடைய "பேசியல்" சடங்கு
ஒன்றுவிட்ட ஒருநாளைக்கு நடைபெறும்.
இந்தச் சடங்கில் திருமணப் பெண் மட்டுமல்லாது
அக்கா தங்கை மச்சாளோடு
அறுபதைத்தாண்டிய மாமிமாரும் சிலவேளை
இணைந்து கொள்வர்
எல்லாரும் அழகுராணிகளாம்.
கனடாக் குளிரில் நடுங்கி உழைக்கும் பெடியனின் காசு
கவலையின்றி கரைக்கப்படும்.

நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

அடுத்த நாள் காலை திருமணமா?
விடிய இரண்டு மணிக்கே
பெண் "பியூட்டிசியனிடம்" போய் விட வேண்டும்.
"அப்ப பாலறுகு வைக்கிறதில்லையோ?"
நீங்கள் தெரியாமல் கேட்டா தொலைந்தீர்கள்.
பாலாவது அறுகாவது
அதெல்லாம் சேர்த்துத்தான் இப்ப "ஷம்பு" செய்கிறார்கள்.
உங்கள் வீட்டுக்காரி விஞ்ஞான விளக்கம் தருவா.
"அப்ப மூத்த ஆக்கள் வைக்கிறதில்லையோ?"
வெகுளியாக நீங்கள் திரும்பவும் கேட்பீர்கள்.
"பியூட்டிசியனும் மூத்தவ தான்."
மனைவி இடக்காப் பதில் சொல்வா,
"உதுக்கேன் இவ்வளவு காசை வீணா செலவழிக்கிறியள்"
உங்கள் வயிற்றெரிச்சலை மெல்லக் கொட்டுவீர்கள்.
"என்ர மேன் காசனுப்பிறான்
நாங்கள் செலவழிக்கிறம் உங்களுக்கென்ன
பேசமாப் போய் ஈசிச்சியருக்குள்ள கிடவுங்கோ"
தன்ட "பேசியல்" செய்த முகத்தைத் தடவிக்கொண்டு
உங்கள் மனைவி பாய்வா,
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

கல்யாணநாள்
மதியம் பன்னிரண்டு மணிக் கல்யாண வீட்டிற்கு
காலை இரண்டு மணிக்கே பியூட்டிசியனிடம் போகவேண்டும்
அலங்காரம் முடிய விடிஞ்சிடும்.
முப்பது முகத்தை பதினாறாக் காட்டிறதென்றா சும்மாவே?
விட்டதும் எழும்பி கண்ணாடியைப்பார்க்க
நிறம் மாறியிருக்கும்.

முகம் மாறியிருக்கும்.
விழி மாறியிருக்கும்.
நெளி தோன்றியிருக்கும்
உச்சி நோக்கி இழுக்கப்பட்ட மயிரால்
வட்டமுகம் நீளமுகமாய் ஆகியிருக்கும்.
"பேசியல் கிறீம், லிப்ஸ்டிக், ஐரெக்ஸ், ஐபிறோ, பிங்பவுடர்"
இவற்றால் மறைக்கப்பட்டு கொஞ்சூண்டு தெரியும் முகம்.
அழகாகி விட்டதாய் பக்கத்திலிருக்கும் நண்பி சொல்ல
(உள்ளூர சிரித்தபடி) அதைச் சத்தியம் என்று நம்பி
உங்கள் மகள் சிலிர்த்துப் போவாள்.
உங்களுக்கே கூட இது நான் பெத்த மகளா? எனச்
சந்தேகம் வந்துவிடும்.
உங்களுக் கென்ன உங்களுக்கு
இப்படித்தான் ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளை
கல்யாணத்தன்று வந்திறங்கி
மணவறையில் பொம்பிளையைப்
பார்த்து கிறங்கிப்போனானாம்.
அடுத்தநாள் காலையில் பெண் முகம் கழுவிவிட்டு வர
தங்கைச்சியைக் காட்டி அக்காவை அனுப்பிப் போட்டாங்கள்
என்று துள்ளியடிச்சு
"டிவோஸ் கேஸ்" போட்டானாம் - நண்பன் சொன்னான்
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

முதலிரவு முடிந்து முகம் கழுவ போய் விடப்போகும்
இந்த செயற்கை அழகிற்கு இவ்வளவு செலவா?
அறியாது கேட்பவர் தேசத்துரோகியாய் நோக்கப்படுவார்.
முதல்நாளே மாப்பிள்ளையை ஏமாற்றும் வேலை
அறிந்தும் ஏமாறும் அசட்டு மாப்பிள்ளைகள்.
என்னே நம் பெருமை
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

இனி என்ன? நேரே மணவறைதான் என்று தான்என்கிறீர்களாக்கும்.
அது தான்இல்லை!
அடுத்து பெண்ணை கமராக்காரரிடம் ஒப்படைக்கவேண்டும்.
இரண்டு கைமாறிய பிறகுதான் பெண் மாப்பிள்ளையிடம் செல்வா.
கமராகாரருக்கு இன்றைய கல்யாணங்களில் தனிமவுசு.
ஐயர் சும்மா பேருக்குத் தான்.
மணவறையில் மந்திரம் தவிர்ந்த மற்றைய
வேலையெல்லாம் அவரால் தான் நடத்தப்படும்.
நான் போன கல்யாணம் ஒன்றில்
கட்டின தாலியை அவிழ்த்து திருப்பிக் கட்டச் சொன்னார்
ஒரு "போட்டோகிராபர்".
முதல் எடுத்த "ஷொட்" வடிவாய் வரேல்லையாம்.
மணவறையில் யாரார் என்னென்ன "பொஷிசனில்"
நிற்க வேண்டும்.
யாரார் என்ன செய்ய வேண்டும்.
எல்லாம் தீர்மானிப்பது அவர்தான்
"பியூட்டிசியனிடமிருந்து" பெண் வந்ததும் அவரது
கிரியைகள் ஆரம்பமாகும்.
தனக்கு "போர் ஹவர்ஸ்" வேணும்.
முன்னமே அவர் போடும் நிபந்தனை இது.
எதற்கென்கிறீர்களா? சொல்கிறேன்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

இந்தியச் சினிமாத்துறையில் ஒரு வழக்கம் இருக்கிறது.
நடிகைகளாக விரும்புவோர்
திறமையான ஒரு "கமராமென்னைப்" பிடித்து
ஆடைகளை குறைத்தும் அழகை மிகைப்படுத்தியும்
ஓர் "அல்பம்" தயாரித்து வைத்திருப்பர்.
அந்த "அல்பம்" தயாரிப்பாளர், டைரக்டர், கதாநாயகன் என
பலரதும் கைகளுக்குச் செல்லும்.

சில வேலைகளில் நடிகையும்தான்!
இது அங்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பிரதாயம்.
விரசமான அச் சம்பிரதாயத்தை
நம் பலயீனம் அறிந்து
புனிதமான நம் கல்யாணங்களில் புகுத்தி
புண்ணியம் தேடிக்கொள்கின்றனர் நம் "போட்டோ கிராபர்கள்"
பொருளுக்குத் தன்னை விற்கத் தயாராகும் ஒரு
நடிகையின் நோக்கத்தை ஒரு குடும்பப் பெண்ணின்
நோக்கமாக்கிக் கொண்டாடுகின்றோம்.
மணமகள்களுக்கு தம்மை நடிகையாயக் கருதும்
ஆசை இருக்கிறது.
மணமகன்மார்க்கு தம் மனைவியை நடிகையைப் போல்
காட்டும் விருப்பம் இருக்கிறது.
இவர்கள் உழுத நிலத்தில் "போட்டோ கிராபர்"
தன் தொழிலை விதைக்கிறார்,
விபச்சாரத்தின் அபச்சாரம் புரியாமல்
இதற்கான பிரச்சாரம் வேறு. உருப்பட்ட மாதிரித்தான்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

"போட்டோ கிராபரிடம்" மணமகள் சென்றதும்
அவரது விளையாட்டுத் தொடங்கும்.
கொஞ்சநேரம் நிற்க வைத்து எடுப்பார்.
கொஞ்சநேரம் இருக்க வைத்து எடுப்பார்.
கொஞ்சநேரம் படுக்க வைத்து எடுப்பார்.
ஸா, பா ஸா தெரியாத மணமகள்.
தன்னை எம். எஸ். சுப்புலட்சுமியாய் நினைத்துக் கொண்டு
வீணையைத் தம்புராவைப் போல் நிமிர்த்துப்
பிடித்து கண்கிறங்கப் "போஸ்" கொடுப்பா.
நடேசரை ஓரக் கண்ணால் பார்ப்பா:
ஆறே காணாத அவ
கணுக்கால் தெரிய சேலையைத் தூக்கிப்பிடித்து

குடத்தில் தண்ணி அள்ளுவா.
(ஆறு பின்னர் அவட போஸோட பொருத்தப்படும்.)
பரத அபிநயங்கள் செய்வா.
ஒய்யாரமாய் முந்தனையை விரித்துக்காட்டுவா.
மொத்தத்தில் நடிக்கும் பயிற்சி திருமணத்தின்
முன் மணமகளுக்கு வழங்கப்படும்.
நடிப்பு சரியாக அவவுக்கு வராத பட்சத்தில்
"போட்டோ கிராபர்"
புதுப்பெண்ணின் கை, கால், தோள், மூக்கு தாடை, கழுத்து
என அத்தனையிலும் தொட்டு திருத்தம் செய்வார்.
இவையெல்லாம் இன்றைய கல்யாணங்களில்
அங்கீகரிக்கப்பட்ட சம்பிரதாயங்கள்.
இதையெல்லாம் மாப்பிள்ளை அனுமதிப்பாரா?
கேட்டால் நீங்கள் ஒரு பிற்போக்குவாதி
முப்பத்தைந்தைத்தாண்டிய அசட்டு மாப்பிள்ளை
கறிக்குதவாத ஏட்டுச்சுரக்காய் எனத் தெரிந்தும்
தன் முத்தல் மனைவியின் கலைப்படங்களை ரசிப்பார்.
போதுமடா சாமி!
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

"போட்டோ கிராபர்" பற்றி இன்னும் இரண்டு
விடயங்கள் சொல்ல வேண்டும்.
இப்போதெல்லாம் கல்யாணங்களுக்கு
சம்பிரதாயத்திற்குத்தான் போகிறோம்.
மாப்பிள்ளை தாலி கட்டும் நிகழ்ச்சி எதுவும்
நம் கண்ணில் படுவதில்லை.
கண்ணில் படுவதெல்லாம் இப்புண்ணியவான்களின்
முதுகும் பின்புறமும்தான்
நாம் போடும் அறுகரிசியெல்லாம் அதுக்குத்தான்
ஜனாதிபதியைச் சுற்றி நிற்கும் "பொடிகாட்ஸ்" போல
மணவறையை முழுமையாய் இவர்கள் சூழ்ந்துவிடுவார்கள்.

இவர்கள் அசையும்போது வரும் இடைவெளியினூடு
ஒருவேளை மணமக்கள் உங்கள் கண்ணுக்குத்
தெரிந்துவிட்டால் அந்த வாரம் கிரகங்கள் உங்கள் ராசிக்கு
நல்ல இடத்தில் இருக்கின்றன என்று அர்தத்ம்.

* * * * * * *

திருமணம் முடிந்த பின்பும் இவர்கள் பணி நிற்காது.
உறவினர்களை மணவறையில் வைத்து படமெடுக்கும் வேலை
மணித்தியாலக் கணக்கில் தொடரும்.
இவர்களால் உறவு முழுதும் மணவறையில் நிறுத்தி வைக்கப்பட
பசிவேளை தாண்டிய பதைபதைப்பில்
விருந்தினர் உள்ளே திட்டி வெளியே சிரிப்பர்.
அவர்கள் உங்களைவிட பெரிய நடிகர்கள்.
"போட்டோ கிராபர்" ஒவ்வொருவரையும் மணமக்களுக்கு முத்தம்
கொடுக்கச் சொல்லுவார்.
யார் என்ன உறவு என்பது பற்றியெல்லாம்
அவருக்கு கவலையில்லை.
சநதடி சாட்டில் நமக்கும் ஒரு"சான்ஸ்" கிடைக்காதா?
இளையோர் வட்டமும் அவரை போற்றிச் சுற்றும்.
அநியாயத்தில் அநியாயம் கடைசியில் நடக்கும்
மேற்குடைகளோடு மணமக்கள் அழைக்கப்பட்டு
சினிமாக் காட்சிகள் தோற்கும்படியான
நெருக்கத்தில் படமெடுக்கப்படுவார்கள்.
கொடுமை என்னவென்றால்
இப்போதைய பெரும்பாலான திருமண "அல்பங்களில்"
முத்தக் காட்சிகளும் பதிவாக்கப்படுகின்றன.
முத்தக் காட்சி என்றால்? இது என்ன கேள்வி?
உதட்டு முத்தக்காட்சிதான்.
இது வெளிநாட்டில் இருந்து வந்தவர்களின் உபயம்
வெள்ளைக்காரர்களோடு எங்களைச் சமப்படுத்தி விட்டார்களாம்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

ஒருநாள் வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தேன்.
நெற்றியில் விபூதி சந்தனத்தோடும் பட்டு வேட்டி
மடிப்புச் சால்வையோடும்
ஒரு பெரியவர் முன்னால் போய்க் கொண்டிருந்தார்
தன்னை மறந்துது அவரது வாய் யாரையோ
கெட்ட வார்த்தைகளால் திட்டியபடி இருந்தது.
களண்டவராய் இருப்பாரோ?
பார்க்கலாம் என்று அருகில் போனேன்.
குப்பென்று சாராய வாடை
அவர் தோற்றத்திற்கு பொருந்தாத வாடை
"பெரியவர், நீங்கள் இப்படிச்செய்யலாமா?" என்றேன்.
அழுதேவிட்டார்.
பின் நடந்ததைச் சொல்லத் தொடங்கினார்.
"தம்பி! வெளிநாட்டிலிருந்து வந்த மருமகன் ஒருவன்
தனக்கு "ரிசப்ஷன்" என்று வீட்டிற்கு வந்து சொன்னான்.
கல்யாண வீட்டிற்கு வந்தனான்தானே எண்டன். கேட்கேல்ல.
அது வேற இது வேற "பைவ் ஸ்ரார்" ஹொட்டல்ல" வைக்கிறன்
நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என்றான்.
வீட்டிற்கு வந்தவனை மரியாதை பண்ண வேண்டும் என்று
அங்க போனன். அங்க உலகமே வேற மாதிரி இருந்தது.
கல்யாண வீட்டில் சீலை கட்டிக்கொண்டு நின்றது எல்லாம்
ஜீன்சோடும் ரீசேட்டோடும் நின்றதுகள்.
பெடி பெட்டை என்ற எந்த வித்தியாசமும் இல்லை.
எல்லாம் ஆளையாள் கட்டிப்பிடிச்சுக் கொண்டு ஆடிச்சுதுகள்.
இடையில மாப்பிள்ளை பொம்பிளை கேக் வெட்ட .....
வெட்டினதும் மாப்பிள்ளை ஒரு சாராயப்போத்தலைக் குலுக்கி
எடுத்து எல்லோருக்கும் அடிச்சான்
ஏதோ "ஷாம்பேன்" போத்தலாம்.
அப்படி அடிக்கிறது அங்கத்த வழக்கமாம்.
விசரங்களால "பஸ்ஸில" வரேக்க

சனமெல்லாம் என்னை குடிகாரனைப்போலப் பாக்குது.
"இவ்வளவு நாளும் நான் எடுத்த நல்ல பெயரெல்லாம் போட்டுது"
கிழவர் பொருமினார்
சென்றிடுவீர் எட்டுத்திக்கும்!
கலைச்செல்வம் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!
பாரதி பாடலை நல்ல படி விளங்கியிருக்கிறார்கள்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

மேற்குலகைப் பார்த்து
முத்தக் காட்சி வரையும் முன்னேறி இருக்கும்
வீடியோக்காரர்கள்.
பாவம் தாங்கள் பயன்படுத்தும் கமராவின் பயன்பாட்டை ம
ட்டும்
இன்று வரை சரியாய்த் தெரிந்து கொள்ளவில்லை.
அசையாத நிலைத்தலை படமெடுத்த "ஸ்ரில் கமராவின்"
வளர்ச்சிதான் "வீடியோ கமரா"
இயங்குதலைப் படமெடுக்க கண்டுபிடிக்கப்பட்ட கருவி அது.
இன்று வரை நான் போன கல்யாண வீடு அத்தனையிலும்
எல்லோரையும் அசையாது நிற்கவிட்டு
அந்தக் கரையிலிருந்து இந்தக் கரை வரையும்
படமெடுப்பதே வழக்கமாயிருக்கிறது.
வீடியோ "லைற்" பட்டதும் எங்களைத்தான் எடுக்கிறான்
எனநினைத்து
தொடர்ந்து புன்னகை புரிய நாம் படும் பாடு இருக்கிறதே
அது பெரும்பாடு!
"மூவி கமராவை" "ஸ்ரில்" கமராவாவ் பாவிக்கும்
மூடத்தனத்தை என் சொல்ல?
முத்தத்தில் முன்னேறியவர்கள் மூளையில் முன்னேறவில்லை.
கெட்டதில் ஆட்சி நல்லதில் வீழ்ச்சி.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

இனி என்ன?
சம்பிரதாயங்கள் முடிந்தால் கல்யாணவீடு தான்.
அங்கும் சினிமாத்தனம் தொடரும்
மண்டப மணவறை அலங்காரங்களுக்கு
மட்டும் இன்றைக்காகும் செலவு
மூன்று நான்கு லட்சங்களைத் தாண்டுகிறது.
சினிமா செற் போடுகிறார்களாம்!
பனியில் உருகும் பாசத்தின் இரத்தம் பணமாய் ஓடும்.
சினிமாத் தனம் நோக்கிய புதுப்புது சம்பிரதாயங்கள் வேறு.
சினிமாவில் வரும் கனவுக் காட்சிகளை நினைவூட்டும் வண்ணம்
மணமகளை அழைத்து வர குழந்தைத் தோழிகள்
வெள்ளை உடையில்
கையில் மெழுகொளியோடு வருவார்கள்.
அப்படி வரும் அக் குழந்தைகளுக்கு
அலங்காரம் செய்ய ஆயிரக்கணக்கில் செலவாகிறது.
ஒரு காலத்தில் திருமணமானவர்கள்தான்
மணவறையில் நிற்பார்கள்.
இன்று குழந்தைகளும் நிறுத்தப்படுகிறார்கள்.
நான் சென்ற ஒரு கல்யாண வீட்டில்
ஒரு குழப்படிக்கார குழந்தையை
மணமகளுக்கருகில் நிறுத்தப்போக
அது திடீரென்று
மணமகளின் உச்சிப் பட்டத்தைப் பிடுங்கி எடுத்தது.
அடிக்கவும் முடியாம பிடிக்கவும் முடியாம
அன்று அவர்கள் பட்டபாடு அல்லோலகல்லோலந் தான்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

அண்மைக்காலமாக ஒரு புதிய சம்பிரதாயம் தொடங்கியிருக்கிறது.
நடுத்தர வீட்டுக் கல்யாணங்களிலேயே

இத்தனை விஷேசமிருக்க
பணக்காரர்களான எங்கள் வீட்டிலும் இவ்வளவு தானா?
சில செல்வந்தர்கள் தம்மை உயர்த்திக் காட்ட
புதிது புதிதாய் திருமணமணக் கிரியைகள் உருவாக்குகிறார்கள்.
அண்மையில் ஒரு கல்யாண வீட்டில்
மணப்பெண்ணை மணவறைக்கு அழைத்து வரும்போது
முன்னே இளம்பெண்களைக் கொண்டு கண்டிய நடனமாடி
வரச் செய்தார்கள்.
பரத நாட்டியம் தப்பிப் பிழைத்தது.
நெஞ்சுக்குழியைத் தொடும் மேலுடையும்
இன்னும் கொஞ்சம் கீழ் இறங்கினாலும் ஆபத்து என்ற
நிலையில் இருந்த கீழ் உடையுமாக
அந்தப் பெண்கள் ஆடிய ஆட்டத்தை என்ன சொல்ல?
சோர்ந்திருந்த கிழவர்கள் கூட நிமிர்ந்து உட்டார்ந்தார்கள்.
"வெறினைஸ் வெறினைஸ்" என்ற அவர்களின் பாராட்டு
எதற்கென்று எனக்கு விளங்கவில்லை.
மணவறையிலிருந்த மாப்பிள்ளை கூட
பெண்ணைவிட்டு விட்டு அவர்களையே பார்த்தான்.
முதற் கோணல்.
உருப்பட்ட மாதிரி தான்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

இதையெல்லாம் பார்த்த ஐயருக்கும் உற்சாகம் வந்து விடும்.
"நான் மட்டும் என்ன, நடிப்பில் குறைந்தவனா?
என் பங்கிற்கு இதோ பாரும்" என அவரும் தொடங்குவார்.
நான் போயிருந்த ஒரு கல்யாண வீட்டில்
மணமகன் கையில் சீப்பைக் கொடுத்து
மணமகளுக்கு தலையைச் சீவிவிடவே பண்ணினார் ஒரு ஐயர்.
மற்றொருவர்மணமக்கள் கையில் மாலைகள் கொடுத்து
எதிரும் புதிருமாக நிற்கச் சொல்லி
முன்னும் பின்னுமாய் அவர்களை நடக்கப் பண்ணி

ஏதேதோ கூத்தெல்லாம் ஆடினார்.
`மாமுது பார்ப்பான் மறைநெறி காட்டிட`
கண்ணகியின் கல்யாணம் நடந்ததாய்
இளங்கோ அடிகள் சொன்னார்.
இன்றைக்கு இவையெல்லாம் மறைநெறியாம்.
இவற்றைப்பார்த்து யாருக்காவது கோபம் வருகிறதா
என்றால் அது தான் இல்லை.`.
வீடியோவில் விழும் நேரம் கூடுகிறதே என்று
அத்தனை பேருக்கும் மகிழ்ச்சி
நாடகமே இந்த உலகம்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

இதையெல்லாம் பார்த்து நாதஸ்வர வித்துவானுக்கும்
உற்சாகம் வந்துவிடும்.
இந்தச் சினிமாவிற்கு நான் தானே இசையமைப்பாளர்
என்று நினைத்துக்கொள்வார்.
உடனே அவரின் விளையாட்டுத் தொடங்கும்.
"மணமகளே மணமகளே வா வா"
"வாராய் என் தோழி வாராயோ"
"பக்கத்திலே கன்னிப் பெண்ணிருக்கு"
இப்படியாய் பழைய சினிமாப் பாடல்களை இசைத்து
அவரும் "அப்ளாஸ்" வாங்கிக் கொள்வார்.
ராஜ வாத்தியம் சேறள்ளும்
ஒரு கல்யாண வீட்டில் உற்சாக மிகுதியில்
இளம் வித்துவான் ஒருவர்.
"வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்"
என்று வாசிக்கத்தொடங்கினார்.
மாப்பிளை பொம்பிளையில ஆர் வாளை மீன்
ஆர் விலாங்கு மீன்?
என் இலக்கிய உள்ளம் ஆராயத்தொடங்கியது.
அடிவாங்கப்போகிறார் என்று பார்த்தால்

அத்தனை பேரும் பாராட்டினார்கள்.
மணமக்கள் பாட்டோடு பொருந்தினார்களோ
என்னவோ யாருக்குத் தெரியும்?
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

முன்பெல்லாம் உறவின் பலம் காட்டவே
மாப்பிள்ளைத் தோழன் ஒருவரை வைப்பார்கள்.
அந்தக் காலத்தில பெண்ணின் தம்பியாருக்கு
தலைப்பாகையைச் சுற்றி
பொம்பிளை வரும் மட்டும் மாப்பிள்ளைக்குப்
பக்கத்தில இருத்தி விடுவினம்.
பொம்பிளை வந்ததும் அப்பாவியாய் அவன் எழும்பிப் போவான்.
மாப்பிள்ளையின் காலைத் தேய்த்துக் கழுவி
ஒரு மோதிரம் வாங்கிக்கொள்வான்.
இப்ப அப்படியில்லை,
மாப்பிள்ளைத் தோழனும் கிட்டத்தட்ட மாப்பிள்ளைக்குச் சமன்.
பொம்பிளைக்குச் சமமாய் மாமியாரே நிற்கும் போது
மாப்பிள்ளைக்குச் சமமாய் தோழன் நிற்கக்கூடாதா?
உங்கள் கேள்வியிலயும் ஞாயம் இருக்கிறது.
மாப்பிள்ளைக்கும் தோழனுக்கும்
உடுப்பெல்லாம் கூட ஒன்றுதான்.
கழுத்திலயிருக்கும் மாலை மட்டுந் தான்
மாப்பிள்ளையை பிரித்துக்காட்டும்.
தோழன்ட உடுப்புக்கும் ஆயிரக்கணக்கில் செலவாகும்.
அன்றைக்கி மட்டுமே உடுக்கக்கூடிய உடுப்பு.
பிறகு கூறைச்சீலை மாதிரி கழட்டி,
அலுமாரிக்க வைக்க வேண்டியது தான்:
சும்மா நாட்களில் உடுத்தா
முந்தி யாழ்ப்பாண பஸ்டாண்டிக்க நின்ற
வைர மாளிகை மாதிரியும்
இப்ப "ஸ்ரார் ஹொட்டல்" வாசலில

தலைப்பாகையோடு நிற்கிற வரவேற்பாளன் மாதிரியும்
சனம் நினைக்கும்.
அதுக்குத்தான் அவ்வளவு செலவு.
மாப்பிள்ளையின் "சொக்ஸ்" காலிற்கு
அரைக்குணியலில் சுண்டு விரலால் தண்ணி தெளிச்சு
("சொக்ஸ்" காலை என்னண்டு கழுவுறதாம்?)
லேசாய் மோதிரம் வாங்குவான் இவன்.
சில தோழன்கள் மணவறையில் இருந்தபடியே
பெண்கள் பகுதியை மயக்கமாய்ப் பார்த்து
தான் மாப்பிள்ளையாகும் ஆயத்தங்களும் செய்வார்கள்.
நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்குமாங்கே பொசியுமாம்.
சில வேளை மாப்பிள்ளையை விட தோழன்
திறமாயும் இருப்பான்.
"தோழனால் மாப்பிள்ளைக்கு முக்கியமில்லாமல் போகுது."
அப்படிச் சொன்னால் நீங்கள் தொலைந்தீர்கள்!
குடும்பமே உங்களை விழுங்கி விடும்.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

முன்பெல்லாம் மணவறைக்கு வரும் மணமகள்
அஞ்சி நடுங்கி வெட வெடுத்து விழுமாப் போல் வருவாள்.
அவள் விழுந்து விடாமல் பிடிப்பதற்காகவே
தோழியரை நிறுத்துவார்கள்.
தடம் பார்த்த அவளது நடையழகே மனதை அள்ளும்.
கொண்டுவந்த மாலையை மணமகனின் கழுத்தில் போடுவதற்குள்
அவளுக்கு வியர்த்து விறுவிறுத்துப் போய்விடும்.
தாலி கழுத்தில் ஏற கையெடுத்து கும்பிட்டு அவள்
விம்மி அழுவாள். பார்க்கவே நெஞ்சுருகும்
மொட்டாக்கை எடுத்ததும்தான் மாப்பிள்ளையும்
பெண்ணும் ஒருவரையொருவர் பார்ப்பர்.
அது அந்தக் காலம்.

* * * * * * *

இன்றைக்கு பெண் எந்தவித அச்சமும் இல்லாமல்
''மாச்பாஸ்ரில்'' வருவது போல் மணவறைக்கு வருகிறாள்.
தலையைக்கூட சரியாய் குனிவதில்லை.
பாரதி சொன்ன நிமிர்ந்த நன் நடையாம்,
அவள் ஓடிப்போய் உட்கார்ந்து விடாமல்
பிடிப்பதற்கே தோழியரோ? என வினா எழும்
நாணம்? அது என்ன விலை?
ஒரு வருஷமாய் "ஷெல்"லிலும் சொல்லலும் கொஞ்சி
இன்னொரு வருஷமாய் "பைக்"கிலும் படத்திலும் உராய்ஞ்சி
சினிமாவையும் "சீரியல்"களையும் பார்த்து,
வருங்கால கணவணை வடா போடா என பேசி திரிந்த பின்
மணவறைக்கு வரும் பெண்ணிடம்
இதையெல்லாம் எதர்பார்க்கலாமா?
ஐயர் கொஞ்சம் இடைவெளிவிட்டால்
மணவறையிலேயே திரும்பியிருந்து கை
பிடித்துப்பேசத் தொடங்கிவிடுவார்கள்.
அச்சம் நாணம் என்று
நீ சொல்வது பழைய கால மூடத்தனம் - எண்கிறீர்களாக்கும்.
அப்படித்தான் என்றால்
இன்றைக்கும் தோழி மொட்டாக்கு இவை எல்லாம் எதற்காம்?
"ஹலோ" சொல்லி விட்டு மாப்பிள்ளைக்கும்
ஐயருக்கும் "ஹாண்ட்ஷேக்" பண்ணி விட்டு
"பக்கத்தில் இருக்க வேண்டியதுதானே"
கேள்வி கேட்டால் நீங்கள் என்னை பழம்பச்சோந்தி என்பீர்கள்
யதார்த்தவாதி வெகுசன விரோதி,
இந்தக்க ாலத்தில ஆணாவது பெண்ணாவது?
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

* * * * * * *

முந்தி கல்யாண வீடுகளில
வந்த ஆக்கள் தான் தம்பதியருக்கு பரிசு கொடுப்பினம்

இப்ப வர்ற ஆக்களுக்கு தம்பதியர் தான் பரிசு கொடுக்கினம்.
எல்லாம் ஐந்நூறு, ஆயிரம் செலவில
வீடெல்லாம் வெளிநாட்டுக் காசு விளைஞ்சு கிடக்குது
யாருக்கு வேணும் உங்க அற்பப் பரிசுகள்
அப்பவும் வெத்தில பை
கொடுக்கிறது தானே? கேட்கிறீர்களாக்கும்,
அது மங்களத்திற்காக!
இது டாம்பீகத்திற்காக!
அது மட்டுமில்லாமல் கல்யாணக்காட்டிலேயே
பரிசுகள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டா!
என பெருமையாய் அடிக்கினம்
கொண்டும் கொடுத்தும் வாழ்றதுதானே உறவு.
என்னட்ட பரிசு வாங்காட்டி உன்னட்ட நான் ஏன் வரவேணும்?
நான் என்ன பிச்சைக்காரனோ? உன்னட்ட சும்மா வந்து சாப்பிட
இப்படி ரோசமாய் ஒருத்தரும் கேட்கிற பாடாயில்லை,
வந்ததுக்கு லாபம் என
எல்லாரும் எல்லோரும் ஓடிப்போய் சாப்பிட்டிட்டு
பாஞ்சு பாஞ்சு பரிசு வாங்கினம்
பரிசு கெட்டத் தமிழர்கள்
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

காசு கூடினதால வந்த பிழைகளில் எல்லாம் பெரிய பிழை
கல்யாணம் முடிந்தோண நடக்குது
கொண்டாட வந்த உறவெல்லாம் வீட்டில நிற்க
மாப்பிளை பொம்பிளை முதலிரவிற்காக
ஓட்டலுக்குப் போயினம்
மூண்டு நாள் கழிச்சுத்தான் வருவீனம்
கொண்டாட வந்த உறவெல்லாம்
ஆளையாள் பார்த்திட்டு வெளிக்கிட வேண்டியது தான்.
இந்த "ஹொட்டல்" முதலிரவு இப்ப கட்டாய சடங்கா ஆயிட்டுது.
பரம்பரையாய் வாழ்ந்த வீட்டில

தெய்வீகமாய் முதல்நாள் வாழ்வைத்
தொடங்க வேண்டும் என்று எண்ணமேயில்லை.
என் பாட்டன் அப்பன் வாழ்ந்த இடத்தில்
நானும் வாழத் தொடங்குகிறேன்.
இது பாட்டாவும் பாட்டியும் அம்மாவும் அப்பாவும் படுத்த கட்டில்
அவர்கள் வாழ்க்கையின் வெற்றி எனக்கும் ஆகவேண்டும்.
இந்த அறையையும் கட்டிலையும் காணும் போதெல்லாம்
முதலிரவு ஞாபகத்தில் வந்து முதுமையிலும்
சிலிர்ப்பு வரவேண்டும்.
இந்த மெல்லுணர்வெல்லாம் செத்து கனகாலமாச்சு.
இப்ப இந்த புனித எண்ணம் எல்லாம்
எவருக்கும் வருவதில்லை.
முதலிரவு முடிஞ்சு அடுத்தநாள் வெளியில வந்த
எங்கட அக்காவ மாமியார் மச்சாள்மார்
எல்லாரும் கட்டிப்பிடிச்சு கொஞ்சியதையும்
பால் காய்ச்சிக் கொண்டு போன அம்மா அக்காவின்
முகமலர்ச்சி கண்டு தலை தடவி கண்ணீர் வடித்ததையும்
அப்பா வேறு புறம் திரும்பி சால்வையால் கண் துடைத்ததையும்
அத்தான் ஒரு புறம் பெருமிதமாய்
நின்றதையும் நினைத்துப் பார்க்கிறேன்.
அன்று நடக்கும் உறவுக் கலப்பு
மாப்பிள்ளைக்கும் பொம்பிளைக்கும் மட்டுமல்ல
இருவீட்டு மனிதருக்குந்தான்.
ஏனோ இது இன்று ஒருவருக்கும் விளங்குவதில்லை.
நல்ல இனம்! நல்ல குணம்! நல்ல மணம்!

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

"ஹொட்டலுக்கு" போகிறார்களாம் ஹொட்டலுக்கு
வெள்ளைக்காரன் காட்டிய வழியம்மா!
அஞ்சு அப்பன், மூன்று அம்மா என வாழ்ற அவங்களுக்கு
அது சரி
அவன்களுக்கு வீடாவது, குடும்பமாவது, பரம்பரையாவது,

நாடோடிச் சாதி வீட்டில படுத்தா என்ன? "ஹொட்டல்ல"
படுத்தா என்ன?
அவனைப் பார்த்து பண்பாட்டில் ஊறிய பரம்பரைத் தமிழனும்
முதலிரவுக்கு "ஹொட்டலு"க்குப் போகிறான்.
எத்தனை குற்றவாளிகள் படுத்த கட்டில்!
எத்தனை குஷ்டரோகிகள் படுத்த கட்டில்!
எத்தனை பாவிகள் படுத்த கட்டில்!
எத்தனை பரத்தைகள் படுத்த கட்டில்!



# மங்கல நன்றிகள்

எமது பிள்ளைகளின் மணமங்கல நிகழ்வையொட்டி வெளிவருகின்ற இந்த அன்புப் பரிசை உருவாக்கி வழங்கிய பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்களுக்கும், நூலில் இடம்பெறும் விடயப்பரப்புக்களுக்கான உட்கருக்களை உருவாக்கிய (உசாத்துணை நூல்களின் ஆசிரியர்களான) பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், கீழாத்தூர் ஸ்ரீநிவாஸா சாரியார், செல்லப்பா தியாகராஜா கனகலிங்கம், நீர்வை தி. மயூரகிரி சர்மா ஆகியோருக்கும், அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த அன்பருக்கும், அழகுற நூலாக்கம் செய்து தந்த கஜானந்த் அச்சகத்தினருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு நடராஜா சிவரத்தினம்**
**முருகையன் கோவிலடி,**
**வல்வெட்டித்துறை.**

